குழந்தை

டாக்டர் மு. வரதராசன்

குழந்தை

டாக்டர் - மு. வரதராசன்
அமைந்தகரை, சென்னை

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை - 1

ரூ. 1·25

முதற் பதிப்பு : 1954
இரண்டாம் பதிப்பு : 1957

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

முன்னுரை

குழந்தை இளஞ்செடி போன்றது. மற்றவர்கள் வளர்ந்த மரம் போன்றவர்கள். இளஞ்செடியை வளர்க்கும் மண் நீர் காற்று ஒளி ஆகியவை உயிரற்றவை ; என்றும் ஒருநிலையாக இருப்பவை. ஆனால் குழந்தையை வளர்க்கும் பெற்றோரும் மற்றோரும் உயிருள்ளவர்கள் ; உணர்ச்சியுடையவர்கள் ; மாறும் இயல்புடையவர்கள். ஆகையால் இளஞ்செடி போல் குழந்தை இயற்கையாக வளர முடிவதில்லை. வளர்ப்பவர்களின் உணர்ச்சிகளும் விருப்புவெறுப்புக்களும் அறியாமையும் அறிவும் குழந்தையின் வாழ்வைப் பலவாறு மாற்றியமைக்கக் காண்கிறோம்.

குழந்தையைத் திருத்துவதிலோ, நாமே திருந்துவதிலோ போதிய முயற்சி செய்யப் பலர்க்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம். ஆயினும் குழந்தையின் மனத்தையும் நம் மனத்தையும் அறிந்து தெளிவதில் பயன் உண்டு. அதனால் பொறுமை வளரும் ; கவலை குறையும். குழந்தை செய்யும் தவறுகளையும் இழைக்கும் இடர்களையும் ஒருவகை மகிழ்ச்சியோடு பார்த்துப் பழகுவோம் ; வியப்புணர்ச்சியுடன் உருகியும் நிற்போம். இவ்வளவு பயன் பெற முடிந்தாலும் போதும்.

மு. வ.

பக்கம்

வலியார்முன் மெலியார்

அல்லி அழகன் இருவரும் நண்பர் வீட்டுக் குழந்தைகள். அல்லி ஆறு வயது உள்ள சிறுமி. அழகன் மூன்று வயது ஆன குழந்தை. இவர்களின் மாமா, வீட்டுக்கு வந்து குழந்தைகளைப் பார்த்து விட்டுச் சென்றார். போகும்போது அல்லியின் கையில் ஒரு விளையாட்டுக் கடிகாரம் கொடுத்துவிட்டுச் சென்றார். அப்போது அழகன் தூங்கிவிட்டிருந்தபடியால் பார்க்கவில்லை. மறுநாள் காலையில் அல்லி அதை எடுத்துப் பார்த்து மகிழ்ச்சியாக இருந்தாள். அப்போது அழகன் அதைப் பார்த்துவிட்டான். அல்லியிடம் சென்று அதை எடுக்க முயன்றான். அல்லி அவனுக்குக் கொடுக்க மறுத்தாள்; தடுத்தாள். கிரீச் என்ற அழுகுரலும் அம்மா என்ற முறையீடும் கேட்டன. போராட்டம் நடந்தது. கடிகாரம் அல்லியின் கைக்குள் இருந்தது. அழகன் அந்தக் கைகளைப் பற்றி இழுத்தான்.

போராட்டக் குரல்கள் தாயின் செவிக்கு எட்டின. சமையலறையிலிருந்து தாய் வந்தாள். அல்லியின் முறையீட்டை அரைகுறையாகக் கேட்டு, அழகனின் கண்ணீரைக் கண்டாள். "இப்படித்தான் குழந்தையை அழவைப்பதா?" என்று அல்லியின் தலையில் ஒரு தட்டுத் தட்டி, அந்தக் கடிகாரத்தைப் பிடுங்கி அழகன்கையில் தந்தாள். சரேல் என்று சமையலறையை நோக்கி நடந்தாள்.

அழகன்முகம் மலர்ந்தது. அல்லியின் முகம் வாடியது; அவளுடைய மலர்விழிகளில் கண்ணீர் வடிந்தது; வீட்டின் மூலையில் தேம்பி அழுதுகொண்டிருந்தாள்.

தவறு யாருடையது? அழகனுடைய தவறா? புதிய பொருளைக் கண்டான். தானும் பெற வேண்டும் என விரும்பினான். அவன் அறிந்த வழியில் விடா முயற்சி செய்தான். வெற்றி பெற்றான். புதுமையில் வேட்கை கொள்வது தவறா? அழகான பொருள்களைப் பெற்றுக்கொள்ள முயல்வது தவறா? புதுமையில் கவர்ச்சி இல்லாவிட்டால் வளர்ச்சி இல்லையே. நல்ல பொருள்களை முயன்று சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் குழந்தையாக இருக்கும்போதே ஏற்பட வேண்டும். இல்லையானால் மனிதனுக வாழும் திறமை ஏற்படாதே. புதுமை வேட்கையும் சேர்க்கும் முயற்சியும் குழந்தைகளுக்கு இயல்பானவை அல்லவா?

அல்லியின் தவறா? பெற்ற பொருளைக் காக்கும் திறன் வேண்டும் அல்லவா? தனக்கென்று சிலவற்றைத் தேடி, தேடியவற்றைக் காக்கும் முயற்சி இல்லையானல் தனித்தன்மை வளர வழி இல்லையே.

இந்தத் தன்மையும் அல்லி தன் பெற்றோரைப் பார்த்துக் கற்ற கல்விதான். தாய் சில நகைகளையும்

விலையுயர்ந்த பொருள்களையும் தன் பெட்டியில் வைத்துப் பூட்டிச் சாவியைத் தன் இடுப்பிலேயே வைத்துக்கொண் டிருப்பதை அல்லி பார்த்திருக்கிறாள். தந்தை சில புத்தகங்களையும் மூக்குக் கண்ணாடியையும் பேனாவையும் மேசைமேல் வைத்து யாரும் தொடக்கூடாது என்று ஆணையிட்டிருக்கிறார். இதுவும் அல்லிக்குத் தெரியும். "தொடாதே, உடைத்து விடுவாய், கெடுத்துவிடுவாய்" என்று அவர் அல்லியிடமே பலநாள் சொல்லியிருக்கிறார். மேசையின் அறையில் என்னென்னவோ பொருளும் பணமும் வைத்து, அதையும் பூட்டிவைத்திருக்கிறார். சில வேளைகளில் அவர் மேசையைத் திறக்கும்போது அல்லி மெல்ல வந்து எட்டிப்பார்த்திருக்கிறாள். அப்பாவையும் அம்மாவையும் பார்த்துக் கற்றுக்கொண்ட கல்வி, அல்லியின் மூளையில் இயற்கையாகப் பதிந்திருக்கிறது. அப்பாவைப் போல், அம்மாவைப் போல் தானும் நல்ல பொருள்களைச் சேர்த்துவைக்கவேண்டும் என்ற ஆசை அவள் அறியாமல் அவளுடைய உள்ளத்தில் வேர் கொண்டுள்ளது.

மாமா வாங்கித் தந்த விளையாட்டுக் கடிகாரத்தையும் அப்படி வைத்திருக்க விரும்பினாள். தம்பி அழகன் அதை நல்லபடி வைத்திருக்காமல் உடைத்துவிடுவானே என்று அஞ்சினாள். அதனால் அவன்கையில் கொடுக்க மறுத்தாள். தவிர, அவன் ஒருமுறை எடுத்துக்கொண்டால் பிறகு கொடுக்கமாட்டான். அவனுக்குக் காக்கவும் தெரியாது. ஆகையால் அவனிடம் கொடுக்கக்கூடாது என்று பிடிவாதம் செய்தாள். இதையும் பெற்றோரிடமிருந்துதான் அவள் கற்றுக் கொண்டாள். அம்மாவும் அப்பாவும் சில பொருள்களை அல்லியின் கையில் கொடுக்கவும் மறுத்து

விடுகிறார்கள். "உனக்கு ஏன்? நீ சின்ன பெண். போட்டு உடைத்துவிடுவாய்" என்று முகம் பார்க்கும் கண்ணாடியையும் கையில் கொடுக்க அம்மா மறுத்திருக்கிறாள். அப்பா தன் கைக்கடிகாரத்தையும் பேனாவையும் கொடுக்காமல் ஏமாற்றியிருக்கிறார். தானும் அதுபோல் சில பொருள்களைத் தம்பியிடம் கொடுக்காமல் காப்பாற்ற வேண்டும் என்பது அவளுடைய நோக்கம்.

அந்த நோக்கம் நிறைவேறாமல் செய்துவிட்டாள் தாய். வந்ததும், கண்டித்துப் பேசி தலையில் அடித்தாள். இந்த ராணுவ ஆட்சி அவளைப் பயப்படுத்தியது. கையிலிருந்த கடிகாரம் பறிமுதல் ஆயிற்று. திக்கற்றவளாய்க் கலங்கினாள்; அழுதாள். தாய் செய்தது நீதி அல்ல, கொடுமை என்று உணர்ந்தாள். ஆனால் தாயை என்ன செய்ய முடியும்? அந்தத் தாயே சட்டம், அவளே நீதிமன்றம், அவளே வழக்கறிஞர், நீதிபதி, போலீஸ், ராணுவம், சிறைக்காவலர் எல்லாருமாக இருக்கிறாள். அவளை எதிர்ப்பதில் பயன் இல்லை. தாய்மட்டும் சேர்த்துவைக்கிறாள், கொடுக்க மறுக்கிறாள். தனக்கொரு சட்டம், மற்றவர்க்கு ஒரு சட்டம் என வாழ்வது கொடுமை என்று அல்லி எண்ணினாளோ, என்னவோ, தெரியவில்லை. இந்த நீதிமன்றத்தில் முறையிடச் சட்ட நுணுக்கஅறிவு, விண்ணப்பம், மனு, 'அப்பீல்' எல்லாம் தேவை இல்லை. அழுது தேம்புவது ஒன்றுதான் 'அப்பீல்' முறை. அதைச் செய்தாள் அல்லி. பயன் விளையுமோ விளையாதோ, நீதி கிட்டுமோ கிட்டாதோ என்று கவலைப் படாமல், பற்றின்றிக் கடமையைச் செய்தாள்; அழுது தேம்புவது ஒன்றே அப்போது அவள் செய்யக்கூடிய கடமை. அதைச் செய்தாள்.

பெருஞ் செல்வர்களாக இருந்தால் இவ்வளவு தொல்லை இல்லை. வீட்டில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையை அறிந்து ஒரே வகையான விளையாட்டுப் பொருள்களை எல்லாக் குழந்தைகளுக்கும் வாங்கிக் கொடுக்கலாம். பலவகைப் பொருள்களைக் கொண்டுவந்து குழந்தைகளிடம் கொடுத்துக் குவித்துப் புதுமைக் கவர்ச்சி இல்லாமல் செய்திருக்கலாம். வீட்டிலே மடித்துவைத்திருக்கும் துணியைக் கடிக்கும் எலி, துணிக்கடையிலே துணிகளைக் கடிப்பதில்லையாம். அதுபோல், விளையாட்டுப் பொருள்கள் நிறைய இருந்தால், கவர்ச்சி இல்லாமல் போய்விடும்.

நண்பரின் குடும்பமோ அளவான வருவாய்உள்ள குடும்பம்; கணக்கில்லாமல் செலவு செய்ய இடம் தராத குடும்பம். பக்கத்து வீட்டில் ஒரு செல்வர் வாழ்கிறார். அவர் ஒருமுறை பொருட்காட்சிக்குப் போய் இருநூறு ரூபாய்க்குப் பொம்மைகள் வாங்கி வந்து தம் குழந்தைகளுக்குக் கொடுத்தார். நண்பருடைய மாத வருவாயே நூற்றைம்பது ரூபாய். அவரால் அதுபோல் செய்ய முடியுமா?

ஒன்று செய்திருக்கலாம். அல்லியிடம் போய் அதைக் கொடுக்குமாறு மெல்லக் கேட்டிருக்கலாம். " நீ நல்லவள், கேட்டால் கொடுப்பவள், நல்ல பெண். தம்பிதான் கெட்டவன். பிடிவாதம் செய்வான். கொடுக்கமாட்டான் " என்று அல்லியைப் புகழ்ந்து அழகனைப் பழித்திருக்கலாம். புலவர்கள் பெரிய அரசர்களை இப்படிப் புகழ்ந்துதான் ஏமாற்றியிருக்கிறார்கள். இந்தப் புகழ்ச்சிக்கு அரசர்களும் நெகிழ்ந்து நல்ல கொடையாளிகளாக மாறியிருந்தார்கள். அல்லியும் அப்படித் தாய் புகழ்வதைக் கேட்டுக் கொடையாளியாக மாறியிருப்பாள். ஆனால் பல வேலைத்

தொல்லைகளை உடைய தாய்க்கு அவ்வளவு பொறுமை ஏது? அப்படியே புகழ்ந்தாலும், தன்னிடம் இருப்பதில் ஒரு பகுதியையே கொடுக்க மனம் வரும். முழுதும் கொடுக்க மனம் வராது. ஒருநாள் இருநாள் கொடுக்க மனம் வரும். எந்நாளும் கொடுத்துக்கொண்டே யிருக்க மனம் வருமா? எல்லாச் செல்வரையும் ஏறக் குறைய எல்லோரும் புகழ்ந்தபடியே இருக்கிறார்கள். அதற்காகச் செல்வர் எல்லோரும் கொடுத்துக் கொடுத்து ஏழைகளாகவில்லை. பழங்காலத்தில் ஆய், பாரி முதலான வள்ளல் சிலர் அவ்வாறு கொடுத்து ஏழைகளாகிவிட்டதாகக் கேள்விப்படுகிறோம். அந்தக் காலத்திலும் ஆளும் திறமை உள்ள அரசகுடும்பங் களில் பிறந்தவர்கள் அப்படிச் செய்யவில்லை. இந்தக் காலத்திலும் வியாபாரம் பாங்கி இவற்றில் பழக்கப் பட்ட செல்வர்கள் அதனால் ஏமாந்துபோவதில்லை. ஆகையால் அல்லியை அப்படி முழுவதும் ஏமாற்றவும் முடியாது போல் தெரிகிறது.

இன்னொன்று செய்திருக்கலாம். அல்லியிடம் போய், "நாளைக்கு இதைவிட நல்ல கடிகாரம் வாங்கித் தருகிறேன். இதைத் தம்பிக்குக் கொடுத்து விடு" என்று கெஞ்சிக் கேட்டிருக்கலாம். இப்படி ஒரு முறை இருமுறை சொல்லி,சொன்னபடி வாங்கிக் கொடுக்கத் தவறிவிட்டால், அப்புறம் பெற்றோர் சொல்லும் உறுதிமொழியில் நம்பிக்கை இல்லாமற் போய்விடும்.

தவிர, நாளைக்கு வரப்போகிற பொம்மைக்காக, இன்று கையில் உள்ளதை இழந்துவிட மனம் வருமா? வளர்ந்த மக்களே இந்த வகையில் திருந்தவில்லையே! நாளைக்குக் கிடைக்கும் உடல்நலத்திற்காக இன்றைக் குக் கிடைக்கும் நாக்கின் சுவையை இழக்க முன்

வருகின்றவர் யார்? நாளைக்குப் பெறும் கடமை வெற்றிக்காக இன்று இப்போதே கிடைக்கும் சோம்பலின் இன்பத்தை விட்டுவிட மனம் வருகின்றதா? அல்லியின் தாயே எதை நாடினாள்? பொறுத் திருந்து குழந்தைகளின் பண்பை மெல்ல வளர்ப்பதை நாடவில்லை. அடித்து அடக்கி உடனே பெறும் குடும்ப அமைதியை நாடினாள். அதனால்தான் சமையலறையி லிருந்து நேரே வந்ததும் பொறுமை இல்லாமல் ராணுவ ஆட்சி நடத்தி முடித்தாள். உடனே பெறும் பயனை நாடும் மனம், வளர்ந்த தாய்க்கே இருக்கும்போது, ஆறு வயது உள்ள பெண் எப்படி வேறு வகையாக இருக்க முடியும்?

இன்னொன்று செய்திருக்கலாம். அல்லியின் மகிழ்ச்சியைக் கெடுக்காமல், அழகனை அழவிட்டிருக்க லாம். அதனால் என்ன விளைந்திருக்கும்? தாயின் துணையை நம்பி மெல்ல அழுது போராடி வந்த அழகன் இனி அப்படி இருந்தால் பயன் இல்லை என்று, தன் ஆற்றலையே நம்பி வெற்றி பெற முயன்றிருப்பான். எங்கெங்கே கைவல்லமையால் வெற்றிபெற முடி யுமோ, அங்கெல்லாம் அடித்தலாலும் பறித்தலாலும் வெற்றி பெற்றிருப்பான். எங்கெங்கே கைவலிமை செல்லவில்லையோ, அங்கெல்லாம் ஏமாற்றும் வேலை பார்த்து ஏமாற்றி வெற்றி பெற்றிருப்பான். சுருங்கச் சொன்னால், முரடனாகியிருப்பன்; அல்லது, திருடனாகி யிருப்பான்.

தாயின் செயல் இதற்கெல்லாம் இடம் தராமல், வலியாரை அடக்கி மெலியாரைக் காக்கும் வகையில் நடைபெற்றது. மெலியார்க்கு இரங்கும் என் மனம் இதைக் கண்டு வாடியது. நான் என்ன செய்வேன்?'

ஆளுக்கு ஒரு சட்டம்

நான் ஒரு நாள் திரு. வி. க. திடலுக்குப் போய் அங்கே நடந்த பொதுக்கூட்டத்தில் சிலர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். கூட்டம் கலைவதற்குச் சிறிது முன்பே வெறுப்போடு புறப்பட்டு வீட்டை நோக்கி நடந்தேன். வீட்டை அணுகியபோது அங்கே நண்பர் எனக்காகக் காத்திருந்ததைக் கண்டேன்.

"எங்கே போயிருந்தாய்?" என்றார்.

"திரு. வி. க. திடலுக்கு" என்றேன்.

"ஏன்?"

"அங்கே ஒரு பொதுக்கூட்டம்."

"எந்தக் கட்சி?"

"அ. கட்சி."

"என்ன பேசினார்கள்?"

"மண முறிவு செய்துகொள்ள விரும்புகிறவர்கள் ஒத்துக் கையெழுத்து இட்டால் அதுவே சட்டப்படி செல்ல வேண்டும் என்று பேசினார்கள்."

" ஆ. கட்சி பேசியதைக் கேட்டிருக்கிருயா ?"

" அன்றைக்கு நான் வேலையாக இருந்தேன். நீ போனுயா ?"

" போனேன்."

" என்ன பேசினர்கள் ?"

" மணமுறிவுக்கு எந்தச் சட்டமும் இடந்தரக் கூடாது என்றும், மிகத் தொல்லையான சில குடும்பத் தார்க்குமட்டும் நீதிமன்றத்தார் விரும்பினல் விதி விலக்காக மணமுறிவு தரலாம் என்றும் பேசினர்கள்."

" இவர்களில் ஒருவர் கூறுவதை மற்றவர் கேட்டு எண்ணிப் பார்க்க மாட்டார்களா ?"

" எண்ணிப் பார்ப்பதே இவர்களுக்கு ஆபத்து அல்லவா ?"

" எப்படி ?"

" ஒரு வேளை எதிர்க்கட்சி சொல்வது சரி என்று மனத்தில் பட்டுவிட்டால், தம் கட்சியில் பற்றும் ஆர்வமும் குறையுமே. கட்சியின் வலிமை தளருமே. ஆகவே எண்ணுவதே ஆபத்து."

"பொதுமக்கள்கண்மூடிகளாக இருக்கக்கூடாது, எண்ணிப்பார்க்க வேண்டும், எண்ணிப்பார்க்க வேண்டும் என்று வற்புறுத்திப் பேசுகிருர்களே."

" உண்மைதான். தம் கட்சிக்கொள்கை பரவ வேண்டும் என்பதற்காக அதைமட்டும் எண்ணிப் பார்க்கச் சொல்லுகிருர்கள்."

" மற்றவர்கள் சொல்வதைக் கேட்பதே இல்லையே."

" தாம் சொல்வதை மட்டும் மற்றவர்கள் கேட்க வேண்டும் என்று கூறுகிருர்கள் !"

" மற்றவர்களிடம் இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது ?"

" எல்லா உரிமையும் இருப்பதாக எண்ணுகிறார்கள் " என்று நண்பர் சிரித்தார்.

" ஏன் சிரிக்கிறீர்கள் ?" என்று கேட்டேன்.

ஏதோ கதை சொல்வது போல் தொடங்கினார். அவர் படித்த கிராமத்தில் ஆசிரியர் ஒருவர் இருந்தாராம். வயது அறுபதுக்குமேல் ஆகித் திண்ணையில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிவந்தாராம். அவரிடம் எதைப் பற்றி என்ன சொன்னாலும், சொல்கிறவர்களின் கருத்தை எள்ளளவும் ஏற்றுக்கொள்ள மாட்டாராம். சிறிது நேரம் பொறுமையாக இருந்துவிட்டு, ' இருந்தாலும் ' என்று தொடங்குவாராம். " இருந்தாலும் நான் சொல்வதுதான் சரி. போகப் போகத் தெரியும், பார் " என்பாராம். அவரைப் பற்றிப் பேசும்போதெல்லாம் ஊரார் ' நான் சொல்வதுதான் சரி ' என்று அவருக்குப் பெயர் வைப்பதுபோல பேசுவார்களாம். கடைசியில் அவருடைய முதுமையில் தெருவழியில் போகும்போதெல்லாம் ' நான்சொல்வது தான் சரி ' என்று உரக்கச் சொல்லிவிட்டுச் சிறுவர்கள் ஓடுவார்களாம். இப்படிச் சிறுவர்களுக்கு அது ஒரு விளையாட்டு ஆகிவிட்டதாம். இதை எடுத்துச் சொன்னார் நண்பர்.

" பாவம் ! வளராத மனம் " என்றேன்.

" நல்ல சொல் சொன்னாய். குழந்தை என்று சொல்லலாம். அந்த ஆசிரியரும் குழந்தைதான். அ - கட்சி, ஆ - கட்சி ஆட்களும் குழந்தைகளே. சிலருக்கு உடல் வளர்ந்தாலும் மனம் வளர்வதில்லை. வளராத மனம் எப்போதும் தான் சொல்வதையே நம்புகிறது ; உலகம் எல்லாம் தன் கருத்தை நம்ப வேண்டும் என்று வற்புறுத்துகிறது. அதனால்தான் குழந்தை என்றேன் " என்றார்.

" குழந்தைகள் அப்படியா கருத்தை வற்புறுத்திப் பிடிவாதம் செய்கின்றன ?" என்று கேட்டேன்.

" சொல்லி முடியாது ! அல்லிக்குப் போன வாரம் ஒரு பெட்டி நிறைய வண்ணப் பென்சில் வாங்கிக் கொடுத்தேன். அது வேண்டாம் என்று ஒரே பிடிவாதம் செய்தாள். பள்ளிக்கூடத்திற்கு எடுத்துக் கொண்டு போகமாட்டேன் என்றாள். பள்ளிக்கூடத்தில் எல்லோரும் ஒட்டகம் ' மார்க் ' உள்ள வண்ணப் பெட்டி வாங்கியிருக்கிறார்கள். நான் வாங்கிக்கொடுத்த பெட்டியின் மேல் யானை அடையாளம் இருந்தது. ஒட்டகப் பெட்டியைவிட உயர்ந்தது, விலையும் மிகுதி, நாள்பட உழைக்கும், நல்ல வண்ணம் உடையது என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயன்படவில்லை. மற்றப் பெண்களைப் போல் ஒட்டகம் போட்டதுதான் எடுத்துக்கொண்டு போவேன் என்று பிடிவாதம் செய்தாள். வேறு வழி இல்லை என்று மற்றொன்று அவள் கேட்டபடி வாங்கிக் கொடுத்தேன் " என்றார்.

" இந்த வேலையை எல்லாம் நீ எடுத்துக்கொள்ளக் கூடாது. உன் மனைவியிடம் ஒப்படைத்துவிட்டால் அவள் குழந்தைகளுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொடுத்துவிடுவாள் " என்றேன்.

" அப்படியும் முடிவதில்லை. அவள் ஒரு முறை கடைக்குப் போய் அல்லிக்காகப் பூ வேலை உள்ள பாவாடைத்துணி வாங்கிவந்தாள். அதில் உள்ள பூ எல்லாம் பெரியவையாக உள்ளன என்று குறை சொல்லி அல்லி அதை மறுத்துவிட்டாள். கடைசியில் அது மனைவியின் சட்டைக்குத்தான் பயன்பட்டது. தவிர, அல்லி நான் சொன்னால் கேட்பாள் ; அம்மா சொன்னால் கேட்கவே மாட்டாள் " என்றார்

" பெண்குழந்தைகள் எப்போதும் அப்பாவின் கட்சி. ஆண்குழந்தைகள் அம்மாவின் கட்சி. அன்பில் மட்டும் அல்ல, பண்பிலும் அப்படித்தான். அறிவிலும் ஓரளவுக்கு அப்படித்தான்."

" நேர்மாருகவும் உண்டு."

" அவைகள் விதிவிலக்குகள்."

சிறித்து நேரம் பொறுத்திருந்து, " இன்றைக்கு ஒரு செய்தி, தெரியுமா?" என்ருர்.

" என்ன ?" என்று கேட்டேன்.

" அல்லி இன்று முழுநாளும் சாப்பிடவில்லை ; பட்டினி. பள்ளிக்கூடத்துக்கு மட்டும் ஒழுங்காகப் போய்வந்தாள். எவ்வளவோ சொன்னேன். கேட்க வில்லை. கடைசியில், நாளைக்குச் சாப்பிடுவதாக இசைந் தாள்.

" என் ? என்ன சண்டை ?"

" என்ேேடு ஒன்றும் இல்லை."

" உனக்கும் அல்லிக்கும் சண்டை இருக்காது. அதுதான் தெரியுமே. ஆனல் உனக்கும் பையனுக்கும் நடக்கும். அதுவும் பையன் பெரியவன் ஆனபிறகு நடக்கும்."

" நான் விட்டுக்கொடுத்து இசைந்து போய்விடு வேன்."

" உன் பையன் விட்டுக்கொடுக்காமல் போராடி ஞல்—."

" அப்போது எப்படியாவது போகட்டும். இதைக் கேள் அய்யா" என்று நடந்ததைச் சொல்லத் தொடங் கினர்.

ஊரிலிருந்து அவருடைய மைத்துனர் மனைவி—அல்லியின் அம்மான் மனைவி—வந்திருந்தாளாம். குழந் தைகள் மூன்று வந்திருந்தனவாம். பொரிவிளங்காய்

உருண்டை செய்வதற்காக வேர்க்கடலை உரித்தார்கள். மைத்துனரின் பையன் வேர்க்கடலையை வாயால் கடித்து உரித்தான். அல்லி தடுத்தாள். அவனுக்கு எச்சில் துப்புரவு பற்றிய பழக்கங்கள் குறைவு. அல்லி மறுபடியும் தடுத்தாள். "அவனுக்கு என்ன? சின்ன பையன்; எச்சில் இல்லை" என்று நண்பரின் மனைவி அல்லியைக் கடிந்தாளாம். தன் அண்ணன் குடும்பம் வந்தபோது, அண்ணியின் மனம் மகிழும் படி நடக்க வேண்டும் என்பது அவளுடைய ஆசை. இது அல்லிக்குத் தெரியவில்லை. 'நான் குவளையை வாயில் வைத்தபடி தண்ணீர் குடித்தால் நீ எச்சில் என்கிறாயே. அழகன் வாயில் கை வைத்தால் எச்சில் என்கிறாயே. இவ்வளவு பெரிய பையன் வாயில் கடித்து உரிக்கிறானே, இதில் தின்பண்டம் செய்தால் எச்சில் ஆகாதா?" என்று அல்லி கேட்டாளாம். "சின்ன பெண்! உனக்கு இந்த வயதில் இவ்வளவு வாயா?" என்று நண்பரின் மனைவி அல்லியை அடித்தாளாம். அல்லி பேசாமல் அழுதுகொண்டே எழுந்து போய் விட்டாளாம்.

இதை நண்பர் சொல்லிக்கொண் டிருந்தபோது, நான் குறுக்கிட்டு, "உன் மனைவிக்கு நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று ஆசை. பெரிய கட்சித் தலைவர்களுக்குப் புகழாசை என்று பழிக்கிறாயே. பார்த்தாயா? குடும்பத்திலும் புகழாசை வந்து விட்டது" என்றேன்.

"குடும்பத்தில் பெண்களுக்குப் புகழாசை இருப்பதைத் தெரிந்துகொண்டுதான், ஒரு திறமையும் இல்லாத குடுகுடுப்பைக்காரனும் பிச்சை எடுக்க வந்து, "எங்கள் அம்மா, லட்சுமியைப் போல கையால் தொட்டதெல்லாம் பொன் ஆகும். இல்லை

கு. 2

என்று வாய்திறந்து சொல்லமாட்டார்கள் மகராசி. இந்த வீட்டுக்கு நல்ல காலம் வருகுது, வருகுது'' என்று சொல்லி அரைப்படி அரிசியை ஏமாற்றிப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறான்'' என்றார் நண்பர்.

"நம்முடைய நாட்டு வரலாறே இதுதானே! உழைக்காமல் வயிறு வளர்ப்பவர்களின் வாய்ப் புகழுக்கு உழைக்கும் பாட்டாளிக் குடும்பங்கள் ஏமாந்த கதைதான் எல்லாம்'' என்றேன்.

நண்பர் பேசாமல் இருந்தார். தெருவில் யாரோ இருவர் பேசிக்கொண்டு போனார்கள். அவர்களில் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, "உங்கள் குணம் வேறு யாருக்கும் வராது'ங்க. லெ. மு. இருக்கிறானே; பார்த்தால் நல்லவனைப் போல இருக்கிறான். மக்கள் அவனை நல்லவன் என்று ஏமாந்துபோகிறார்கள். அவன் கொடிய சண்டாளனுங்க'' என்றான். உடனே நான் நண்பரைப் பார்த்து, "கேட்டதா அவன் பேச்சு?'' என்றேன்.

"கேட்டது'' என்றார்.

"அவனுடைய பேச்சிலிருந்தே ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். அவன் மட்டும் அல்ல, அவனுடைய முன்னோரும் உழைக்காமல் ஊரை ஏமாற்றி வயிறு வளர்த்த கூட்டம் என்று சொல்லிவிடலாம்'' என்றேன்.

"எப்படித் தெரியும்?'' என்றார்.

"உழைத்து வயிறு வளர்க்கும் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு இப்படி வாய்திறந்து புகழும் கலையே வராது'' என்றேன்.

"ஆனால் புகழைக் கேட்டு ஏமாறும் ஆசை இருக்கிறதே உழைப்பாளிகளுக்கு'' என்றார்.

"அதனால்தான் அழிகிறார்கள்'' என்றேன்.

" என் மனைவிக்கும் அதனால்தான் அல்லியின் மேல் அவ்வளவு கோபம் வந்தது " என்றார்.

சிறிது பொறுத்து, " உன் மனைவி மட்டும் அல்ல, ஏறக்குறைய எல்லாரும் அப்படி இருக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்குள்-மனைவி கணவன் மக்களுக்குள்—புகழாசை மானஉணர்ச்சி இவைகள் இல்லாமலிருந்தால் குடும்பம் அமைதியாக நடக்கும்; விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை வளரும். இல்லையானால் கோபம் வெறுப்பு முதலியவை நிறைந்து போராட்டங்கள் பெருகும். வெளியார் வரட்டும், போகட்டும். ஆனால் இப்படி வந்து போகிறவர்களிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற வீண் ஆசையால், மக்கள் அடிபட வேண்டுமா? கணவன் துன்பப்பட வேண்டுமா? நாம் எவ்வளவு நல்ல வகையில் நடந்தாலும், வந்து போகும் வெளியாரின் கண்ணுக்குக் குற்றங்கள்தான் தெரியும். அவர்களைப் பற்றிக் கவலைப்படாதிருந்தால் குடும்பம் இரும்புக் கோட்டை போல் இருக்கும். கோபம் ஆத்திரம் முதலிய யானைகள் இந்தக் கோட்டையைத் தகர்க்க முடியாது " என்றேன்.

" அண்ணியிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற ஆசையால், அல்லியின் தலையில் அடிவிழுந்தது. நீ சொல்வது உண்மைதான். வீட்டுக்கு வந்து போகிறவர்களின் மதிப்புக்கு ஏங்கிக் கிடந்தால், வளர வேண்டிய வீட்டுக் குழந்தைகள் தொல்லைப் படுகின்றன " என்றார் நண்பர்.

" அப்புறம் அல்லி அந்தக் கடலை உருண்டையைத் தின்னவே இல்லையா?"

" எச்சில், வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். அந்த வேர்க்கடலை கலந்து மனைவி முறுக்குச் செய்தாள்.

அதுவும் எச்சில்தான் என்று சொல்லி மறுத்துவிட்டாள். எண்ணெயில் வெந்தபின் எச்சில் இல்லை என்றும் சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை " என்ருர்.

" முதலில் ஒழுங்கு பற்றிப் பேசிவிட்டுப் பிறகு அதிகாரம் வந்தபிறகு தாமே ஒழுங்கு மீறுகிருர்கள் சிலர். அதுபோல் செய்கிறீர்கள். அதனுல் நீங்கள் ஏற்படுத்தும் ஒழுங்குமுறைகளுக்கு நாளடைவில் மதிப்பே போய்விடும். வாயில் கை வைத்தால் எச்சில், குவளையை வாயோடு வைத்துக் குடித்தால் எச்சில் என்று முதலில் சொல்லிக் கற்றுக்கொடுத்துவிட்டு, பிறகு அதையே தட்டிக் கழிக்கப் பார்க்கிறீர்கள். அல்லியின் உள்ளத்தில் வாழும் உண்மையை — உள்ளொன்று புறமொன்ருக இல்லாமல் வாழும் உண்மையைக் — கெடுக்க நீங்களே கற்றுக்கொடுப்பது போல் ஆகிறது."

" வேறு என்ன செய்வது ?"

" உங்கள் எச்சில்விதியை மைத்துனர்மகனிடம் அப்போது வற்புறுத்தியிருக்க வேண்டும். தயங்கியிருக்கக்கூடாது. நல்ல பெயர் எடுப்பதில் உள்ள ஆசை கோழை ஆக்குகிறது."

" கொள்கையைப் போற்ருமல் புகழைத் தேடி அலைந்தால் கோழை ஆவது உண்மைதான் " என்ருர் நண்பர்.

யார் பெரியவர்கள் ?

ஒருநாள் நண்பர் கூடத்தில் தம் குழந்தைகளோடு உட்கார்ந்து அமைதியாக ஏதோ பேசிக்கொண்டிருந்த போது போய்ச் சேர்ந்தேன். அவருடைய குரல் கேட்டுத் திண்ணையோரம் யாருக்கும் தெரியாமல் நின்றேன். அவர் என்ன சொல்கிருர் என்று அறியும் ஆசையோடுதான் நின்றேன்.

நண்பரின் குரல் தெளிவாகக் கேட்டது. "அல்லி! உனக்கும் சொல்கிறேன். அழகன்! நீயும் கேள். தெரியுதா ? இனிமேல் நீங்கள் இரண்டுபேரும் சொன்ன படி நடக்கணும். நானும் அம்மாவும் பெரியவர்கள். பெரியவர்கள் சொன்னபடி சின்னபிள்ளைகள் கேட்கணும். தெரியுதா ? சொன்னபடி கேட்டு நடக்கிற வர்கள்தான் நல்ல பிள்ளைகள்" என்று உபதேசம் செய்துகொண்டிருந்தார்.

கேட்டு உள்ளே நுழைந்தேன். " அதோ ! மாமா வருகிருர் " என்று அல்லி சொல்லிவிட்டாள். அந்தப்

பேச்சு நின்றது. நண்பர் என்னை வரவேற்று வேறு பேச்சுத் தொடங்கினார்.

அவருடைய உபதேசம் எவ்வளவு செயற்கையானது என்று சொல்லலாமா என்று வாயெடுத்தேன். உடனே தடுத்துக்கொண்டேன். வேறொரு நாளில் நல்ல வாய்ப்புக் கிடைக்கும்போது பயனுள்ள வகையில் சொல்லலாம் என்று முடிவு செய்துகொண்டேன்.

அம்மாவும் அப்பாவும் பெரியவர்களாம். குழந்தைகள் சின்னவர்களாம். இப்படி முடிவு செய்தவர் யார்? இது ஒரு கட்சியாரின் முடிவே தவிர, 'ஜனநாயக' முறையான முடிவு அல்ல. பெற்றோரும் வளர்ந்த மற்றவர்களும் சேர்ந்து தாங்களே இப்படித் தங்களைப் பெரியவர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். குழந்தைகளைக் கலந்து கேட்டுச் செய்யாத முடிவு இது.

குழந்தைகள் தங்களைவிடப் பெரியவர்கள் என்று எப்போதும் யாரையும் மதிப்பதே இல்லை. சிலரைப் பகைவர்களாக மதிப்பது உண்டே தவிர, எவரையும் உயர்ந்தவர்களாக மதிப்பதில்லை. கதவின் வளையத்தை ஆட்டினால் சினம்கொள்ளும் கிழவர்கள், குறுக்கும் நெடுக்கும் ஓடினால் உறுத்துப்பார்க்கும் தாடிகாரர்கள், தினைப்புனத்துக் கிளிகள் போல் கூடிக் கூச்சலிட்டால் திரும்பிப் பார்த்து விழிக்கும் தாடிகாரர்கள், கதை சொல்ல மனம் வராத கிழவிகள், சிறுநீரும் மலமும் எங்காவது கழித்தால் மிரட்டி வரும் மோப்பக்காரர்கள் முதலியவர்களைக் குழந்தைகள் தம் பகைவர் பட்டியில் சேர்த்துவிடுகின்றன. இவர்கள் தவிர, மற்றவர்களைத் தோழர்பட்டியிலும் தொண்டர்பட்டியிலும் சேர்க்கின்றன. இல்லையானால் பெற்றோரின் மேலும் மற்றோரின்மேலும் குழந்தைகள் காலையும்

கையையும் போட்டு விளையாடுமா? அவர்கள்மேலே விழுந்து புரளுமா? இது கொடு, இப்படிச் செய் என்று உரிமையோடு போராடி ஊடல் கொள்ளத்தான் முடியுமா? அவர்கள் தங்களைவிடப் பெரியவர்கள் என்றும், உயர்ந்தவர்கள் என்றும் எண்ணம் இருந்தால் குழந்தைகளால் இப்படிச் செய்ய முடியாது.

தவிர, தன்மான உணர்ச்சியில் குழந்தைகளை யாரும் வெல்ல முடியாது. உலகமே தலைகீழ் ஆனாலும், குழந்தைகள் ஒருவருக்குப் பணிந்து போவதில்லை. பெற்றோரின் ராணுவ ஆட்சிக்கும் மற்றவர்களின் போலீஸ் அடக்குமுறைக்கும் பயந்து குழந்தைகள் சில வேளைகளில் அவர்களுக்குப் பணிந்துவிடுவது உண்மைதான். அதனாலேயே அவர்களைத் தலைவர் களாக ஒத்துக்கொண்டதாகப் பொருள் அல்ல. அரசன் ஒருவன் இன்னொருவனிடம் சிறைப்பட்டான் என்றால், தலைமையை ஒத்துக் கொண்டதாக ஆகாது. அகப்பட்டுக் கொண்டமையால் வேறு வழி இல்லாமல் சிறையில் கிடப்பதாகக் கொள்ள வேண்டும். சிறை யிலிருந்து வெளியே சென்றதும் எதிர்த்துக் கடமை யைச் செய்வான். அதுபோலவே ராணுவ ஆட்சிக்கும் போலீஸ் அடக்குமுறைக்கும் குழந்தைகள் சிலகாலம் அடங்கினாற்போல் இருக்கும். வாய்ப்புக் கிடைத்ததும் பழைய உரிமைப் போரைத் தொடங்கிவிடும்.

இவற்றை எல்லாம் நண்பர் உணரவில்லை. பெரி யவர்களாம், சின்னவர்களாம், என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தார்.

வாய்ப்பு வரும் என்று இருந்தேன்.

மற்றொருநாள் நானும் அவரும் அதே இடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, அல்லியின் தாய் அழகனை மட்டும் அழைத்துக்கொண்டு எங்கோ புறப்பட்டாள்.

"நானும் வருகிறேன்" என்று அல்லி கெஞ்சினாள். "நீ வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே தாய் போய்விட்டாள்.

சிறிதுநேரத்திற்கெல்லாம் தாய் திரும்பி வந்தாள். அழகன்கையில் நூலுருண்டை ஒன்று இருந்தது. அதைப் பிரித்துக்கொண்டே அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்தான். நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவன் நூலின் முனையை அவருடைய தோளில் கட்டி விட்டான். மணி பத்து அடித்தது. நண்பர் எழுந்தார். நானும் எழுந்தேன். "அப்பா அப்பா! இருப்பா" என்றான் அழகன். நண்பர் அதைக் கேளாமலே நடந்தார். அழகன் ஓடிவந்தபடியே "மெல்லப் போ அப்பா" என்றான். "என்ன'டா அது?" என்று கேட்டபடியே நடந்தார் அவர். "நீ மாடு அப்பா. மெல்லப் போ" என்றான் அழகன். அப்போதுதான் எனக்கு அந்த நூலின் விளையாட்டும், அப்பாவை மாடு ஆக்கி நூல் கட்டிய செய்தியும் தெரிந்தன. அப்போதும் நண்பர் அவனுடைய வேண்டுகோளைப் பொருட்படுத்தாமலே, "போ'டா. ஆபீசுக்கு நேரம் ஆயிற்று. நான் போக'ணும்" என்று சொல்லிக் கொண்டே நடந்தார். நூல் பட்டென்று அறுந்தது. மனம் உடைந்தவனாய் அழகன் நின்றான்; வாயில் ஏதோ முனகினான். "என்ன'டா அது?" என்றார் நண்பர்.

"சொன்னால் கேட்கலே, நீ கெட்ட பிள்ளை" என்று மழலை மொழியில் தன் சினத்தைப் புலப்படுத்தினான் அழகன்.

அல்லி சிரித்தாள்.

நானும் சிரித்தேன்.

நண்பர் தெரிந்துகொண்டார்.

நாமே பின்னிய வலை

ஒருநாள் நண்பர்வீட்டுத் திண்ணைமேல் உட்கார்ந்து அவரும் நானும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிர்வீட்டுப் படியில் ஒரு காட்சியைக் கண்டோம். தேள் ஒன்றை அடித்த எதிர்வீட்டுக்காரர் அதைக் கொண்டுவந்து தெருவில் போட்டுவிட்டுப் போய்விட்டார். அந்த வீட்டுக் குழந்தை முட்டி போட்டுக்கொண்டே கீழே இறங்கியது. அதற்கு வயது ஒன்று இருக்கும். ஏன் இறங்குகிறது என்று கவனித்தோம். அது தன் கையிலிருந்த முறுக்கை கீழே எறிந்துவிட்டிருந்தது. அதை எடுக்கத்தான் இறங்குகிறது என்று அறிந்து பார்த்துக் கொண்டிருந்தோம். படிகளை விட்டு இறங்கியதும் முறுக்குத் துண்டை எடுக்காமல், அடித்துப் போடப்பட்ட தேளை வாய்க்கு அருகே எடுத்துச் சென்றதைக் கண்டோம். கண்டதும் ஆ ஆ என்று அதட்டினோம். குழந்தை எங்களைத் திரும்பிப் பார்த்து நின்றது.

நான் சென்று அந்த முறுக்குத்துண்டை எடுத்துக் கொடுத்தேன். கொடுத்ததைப் பெருமல் வெறுப்போடு அதைக் கீழே எறிந்தது. நான் மறுபடியும் எடுத்துப் படியின்மேல் வைத்துக் கையால் காட்டினேன். குழந்தையோ மறுபடியும் தரையே எடுக்கச் சென்றது. அதற்குள் ஓர் அம்மையார் வந்து குழந்தையை வீட்டுக்குள் எடுத்துச் சென்ருர்.

சிறிது நேரம் கழிந்ததும், அல்லியும் அழகனும் வீட்டைநோக்கி வந்தார்கள். அல்லியின் கையில் அலரிப் பூக்கள் இருந்தன. "எதற்காக அம்மா இந்தப் பூக்கள்?" என்ருர் நண்பர். "விளையாட" என்ருள் அல்லி. அழகன் ஓடிவந்து நண்பர்மேல் சாய்ந்தான். அவனுடைய சட்டைப்பையிலிருந்து அலரிக்கொட்டைகள் விழுந்தன. அவற்றைக் கண்ட நண்பர் வெறுப்போடு அல்லியைப் பார்த்து, "விஷம் ஆச்சே! இந்தக் கொட்டைகளைத் தம்பியிடம் எடுத்துக் கொடுக்கலாமா? உனக்கு அறிவு இல்லையா?" என்று சொல்லிக்கொண்டே, அந்தக் கொட்டைகளைத் தொலைவில் வீசி எறிந்தார். அழகனுடைய சட்டைப் பைகளைத் தடவி மற்றக் கொட்டைகளையும் எடுக்கத் தொடங்கினுர். அவன் "ஓ" என்று அரற்ற, நண்பர் எப்படியோ அவனுக்குத் தெரியாமல் இன்னும் சில கொட்டைகளை எடுத்து முன்போலவே தொலைவில் எறிந்தார். அழகன் அந்தக் கொட்டைகள் போன திசையைப் பார்த்தவாறே அழலானுன். ஒருவாறு தேற்ற முயன்ற நண்பர் அவனை உள்ளே அழைத்துப் போய், மிட்டாய் இரண்டு கொடுத்து மகிழவைத்தார்.

பகல் உணவுக்கு நேரம் ஆனதும் நண்பர் என்னையும் உண்ணுமாறு அழைத்தார். நானும் அவரும்

அமர்ந்தோம். குழந்தைகளும் வந்தன. அல்லி கையையும் காலையும் கழுவிக்கொண்டு வந்தாள். அழகன் கழுவாமலே வந்தான். நண்பர் அவனைப் பார்த்ததும், "அக்காவைப் பார். நல்ல பெண். கைகழுவிக்கொண்டு வந்தாள். நீயும் போய் கழுவிக்கொண்டு வா" என்றார். அவன் ஊஊம் என்று மறுத்தான். மனைவியை அழைத்து, "இவனுடைய கையைக் கழுவி அனுப்பு. மடப் பையன் அப்படியே சாப்பிட வருகிறான்" என்றார். தாய் வந்தபோதும் அவன் மறுத்தான். அடி விழுமோ என்று நான் அஞ்சிக் குறுக்கிட்டு, "இங்கேயே ஒரு பாத்திரம் கொண்டுவந்து அதில் கழுவிவிடுங்கள் அம்மா" என்றேன். தாய் அவ்வாறே ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டுவந்து அவன் இருந்த இடத்திலேயே கையைக் கழுவினாள்.

நண்பர் பக்கத்தில் அல்லியும், அப்பால் அழகனும் உட்கார்ந்தார்கள். உணவு பரிமாறப்பட்டது. உண்ணத் தொடங்கினோம். அல்லி அழகன் இருவர்க்கும் தனித்தனியே கலங்கள் வைக்கப்பட்டன. "யாரும் ஊட்டாமல் தானே உண்ணும் பழக்கம் குழந்தைக்கு நல்லதுதான்" என்று நண்பரிடம் சொன்னேன். "அய்யோ! அதிலே எவ்வளவு வம்புகள்! பொறுத்துப் பார் அய்யா" என்றார் நண்பர்.

"குழந்தைகள் அப்படித்தான்" என்றேன்.

"ஒரு குழந்தையை வளர்ப்பதைவிட நாற்பது பெரிய ஆட்களைக் கட்டி மேய்க்கலாம். எடுத்ததற்கெல்லாம் வேலையாட்கள் காத்திருக்கும் செல்வர்களுக்குத்தான் குழந்தைகளை வளர்ப்பது எளிது. எல்லா வேலைக்கும் நாமே ஆளாகஉள்ள நம் குடும்பங்களில் குழந்தைகளை நன்றாக வளர்க்க முடியாது" என்றான் நண்பன்.

“அவர்களுக்குக் குழந்தைகளை வளர்க்கும் முறையே தெரியாது. எல்லாம் வேலைக்காரர் வளர்க்கும் முறையேதான்” என்றேன்.

“இருந்தாலும் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு கவனிக்க இரண்டு மூன்று ஆட்கள் இருப்பார்கள். நமக்கு முறை எல்லாம் தெரிந்திருந்தும், வாய்ப்பும் ஓய்வும் இல்லையே! என்ன செய்வது?” என்றான்.

அதற்குள் அழகனும் அல்லியும் போராட்டம் தொடங்கிவிட்டார்கள். “என் கலத்தில் போடாதேடா” என்று அல்லி எதையோ எடுத்து வீசினாள். “எனக்கு இதெல்லாம் வேண்டாம்” என்று அழகன் மறுபடியும் எதையோ எடுத்து நீட்டினான்.

பார்த்துத் தெரிந்துகொண்டோம். பருப்புக் குழம்பில் உள்ள காய்களை எல்லாம் அழகன் வேண்டாம் என்று எடுத்து அல்லியின் கலத்தில் போட்டுவிட்டான். இன்னும் சிலவற்றைக் கையில் எடுத்து அல்லியின் கலத்திலேயே இடுவதற்கு முயன்றான். அவளுடைய சினத்தைக் கண்டு பேசாமல் இருந்தான்.

“உன் கலத்திலேயே ஒரு மூலையில் வைத்திரு” என்று நண்பர் அழகனுக்குச் சொன்னார்.

ஊஊம் என்ற மறுப்புக்குரல் வந்தது.

“அல்லி! உன் கலத்திலே ஒருபக்கம் வாங்கி வைத்துக்கொள் அம்மா” என்று மகளுக்குச் சொன்னார்.

“முடியாது. எச்சில். அவனுடைய எச்சில் வேண்டாம்” என்றாள் அல்லி.

“எச்சில் முதலியவற்றை எல்லாம் நீங்கள்தானே குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தீர்கள்?” என்று நண்பரைப் பார்த்துச் சிரித்தேன்.

" அழகா ! கண் அல்லவா ? உன் கலத்திலேயே ஒரு பக்கம் இருக்கட்டும். நான் அப்புறம் சாப்பிட்டு விடுகிறேன் " என்ருள் தாய்.

" முடியாது " என்ற தெளிவான மறுமொழி வந்தது.

நான் ஒரு புது வழி சொன்னேன். " ஒரு சின்ன தட்டுக் கொண்டுவந்து அவனுடைய கலத்தின் பக்கம் வைத்துவிடுங்கள். அவனுக்கு வேண்டாதவைகளை எல்லாம் அதில் எடுத்து வைத்துவிடுவான் " என்றேன்.

சொன்னபடி நடந்தது. அவனும் எதிர்பார்த்த படி செய்தான். போராட்டம் தீர்ந்தது.

" அவனுக்குப் பிடிக்காத காய்களை நீங்கள் ஏன் வைக்கிறீர்கள் ?" என்று தாயைப் பார்த்துக் கேட்டேன்.

" எந்தக் காய் வைத்தாலும் தின்பதில்லையே. பருப்புக்குழம்பு விட்டால் அதில் உள்ள காய் வராதா ? அதைத் தின்னக் கூடாதா ?" என்ருள் அந்தத் தாய்.

" காய்களைத் தின்னும்படி வற்புறுத்தி யிருப்பீர்கள். அதனுல் அவற்றின்மேல் வெறுப்பு வந்து விட்டது. மிட்டாய் தின்னக்கூடாது என்று தடுத்திருப்பீர்கள். அதனுல் அதன்மேல் ஆசை வளர்ந்து விட்டது " என்றேன்.

" அது நல்ல காரணம் " என்ருர் நண்பர்.

" வேறு என்ன ?" என்றேன்.

" மிட்டாய் இனிப்பு " என்ருள் அவன் மனைவி.

" அப்படியானுல் முறுக்கு—?" என்றேன்.

" பல்லுக்கு வேலை இருக்கிறது" என்ருர் நண்பர்.

"ஏதாவது ஒரு காரணம் கண்டுபிடிக்கிறாயே. அதுபோல் குழந்தையின் மனநிலையை அப்போது அப்போது ஆராய்ந்து கண்டுபிடித்துத் தக்கபடி நடக்கக் கூடாதா ?" என்றேன்.

"இருக்கிற தொழிலைச் செய்து வீட்டுக்கு வருவதே களைப்பாக இருக்கிறது. இங்கே வந்ததும் இல்லாத குறை, பொல்லாத குறை, ஊரார் குறை, உற்றார் குறை எல்லாம் உண்டு. குழந்தையின் மனநிலையைக் கண்டுபிடிக்க நேரம் ஏது ? நேரம் இருந்தாலும் ஊக்கம் ஏது? நீ சொல்கிறபடி செய்ய வீட்டுக்கு ஒரு மாண்டிசோரி அம்மையார்தான் வேண்டும்" என்றார்.

"இதையே ஒரு கலையாக்கிக்கொள்ள வேண்டும்" என்று கூறினேன்.

"நமக்கு விருப்பமானதைத்தான் கலையாக்கிக் கொள்ள முடியும். சுமையானதை அவ்வாறு செய்ய முடியுமா ? அதிலும், இந்தக் குழந்தைகளின் பிடிவாதம் ! அப்பப்பா !" என்றார்.

"எல்லாம் நாம் கற்றுக்கொடுத்ததுதான்" என்றேன்.

"கலத்தில் உள்ள காயையும் எடுத்து எறியும்படியாக நாங்கள் கற்றுக்கொடுத்தோமா ?"

"அவனுடைய சட்டைப்பையில் இருந்த அவரிக் கொட்டைகளை எவ்வளவு வெறுப்போடு வீசி எறிந்தாய் ! அதுபோல் இவன் காய்களை வீசி எறிகிறான். இப்படி எத்தனை நாள் வெறுப்பை வளர்த்திருப்பாய் ! மிட்டாய் கொடுத்து விருப்பை வளர்த்தாய். இப்படி விருப்பு வெறுப்பை நன்றாக வளர்த்துவிடுகிறோம். தேளுக்கும் முறுக்குக்கும் வேறுபாடு தெரியாமல், விருப்பு வெறுப்பு வேறுபாடு இல்லாமல் பிறக்கும்

குழந்தைகளுக்கு — வேண்டுதல் வேண்டாமை இல்லாமல் பிறக்கும் குழந்தைகளுக்கு — நாமே இந்தக் கல்வி எல்லாம் கற்றுக்கொடுக்கிறோம். நம்மை அறியாமல் கற்றுக்கொடுக்கிறோம். அவைகள் கற்றுக்கொண்ட பிறகு வருந்துகிறோம்" என்றேன்.

அல்லியின் தாய் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்து, "அவன்தான் குழந்தை. இவளுக்கு என்ன? இவளுக்குத் தெரியாதா? தம்பி காய் எடுத்துப் போட்டால் என்ன? கலத்தில் வாங்கி வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்றாள்.

"ஆமாம் அம்மா! நீங்கள்தானே எச்சில் பற்றிய வேறுபாட்டைக் கற்றுக்கொடுத்தீர்கள்? எல்லாம் ஒன்று என்று எண்ணிக்கொண்டு உலகத்தைப் பார்த்த குழந்தைக்கு நீங்கள்தான் என்னென்னவோ கற்றுக்கொடுத்தீர்கள். உண்ணும் கலம் எச்சில் என்றும், வலக்கையால் எடுத்துச் சாப்பிட வேண்டும் என்றும், கலத்தை இடக்கையாலும் தொடக்கூடாது என்றும் நீங்கள் கற்றுக்கொடுத்தீர்கள் அல்லவா? வலக்கையின் எச்சிலை இடக்கை தொடக்கூடாது என்றால், தம்பியின் எச்சிலை அக்கா தொடலாமா?" என்று கேட்டேன்.

"ஏதோ ஒரு பூச்சி தானே வலைபின்னிக்கொண்டு பிறகு அந்த வலையிலிருந்து வெளியே வரமுடியாமல் அகப்பட்டுக்கொண்டு வருந்துமாமே, அதுபோல் உள்ளது இது!" என்றார் நண்பர்.

"இன்று நாம் சிக்குண்டு வருந்தும் பழக்க வழக்கங்கள், மூடநம்பிக்கைகள் எல்லாம் நாமே ஏற்படுத்திக் கொண்டவைகள்தான். பொருளாதாரச் சிக்கலும் அப்படியே. அரசியல் சிக்கலும் அப்படியே. இவைகள் எல்லாம் நாமே பின்னிய வலைகள்.

நாமே அகப்பட்டு வருந்துகிறோம். அணுக்குண்டு, மனித மூளை படைத்த கருவிதான். இப்போது அதன் தீமையிலிருந்து தப்பிப் பிழைப்பது எப்படி என்று மனித மூளையே வருந்துகிறது. குழந்தைகளின் உள்ளத்திலும் நம்மை அறியாமல் நல்லெண்ணத்தோடு பல தீமைகளை விதைக்கிறோம். குழந்தைகள் வளர்ந்து மனிதர் ஆனதும், அந்தத் தீமைகளே வாழ்வைத் தாக்கும்போது போக்க வழி இல்லாமல் வருந்துகிறோம்" என்றேன்.

"பொதுவாக மனிதன் நின்று விளையும் பயனைப் பற்றி எண்ணிப் பார்ப்பதே இல்லை. உடனே விளையும் பயனைப் பெற விரும்பி அவசரப்படுகிறான். இதுவே மனிதனிடம் உள்ள பெரிய குற்றம்" என்றார் நண்பர்.

சிறிதுநேரம் இருந்தபின் நண்பரிடம் விடைபெற்றுப் புறப்பட்டேன். என்னென்னவோ எண்ணிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தேன்.

போட்டியும் பொறாமையும் கூடாது என்கிறோம். "நீ அவனைவிட வல்லவன்" என்றும், "அவன் கெட்ட பையன்". என்றும், "அவன் சொன்ன வேலை செய்கிறான், அவன்தான் நல்ல பையன்" என்றும், "அவளுக்கு மட்டும் மிட்டாய் வாங்கித் தருவேன், உனக்கு இல்லை" என்றும் சொல்லிச் சொல்லிக் குழந்தைகளுக்குப் போட்டியுணர்ச்சியும் பொறாமையும் ஊட்டுகிறோம்.

பிறர்பழி பேசக் கூடாது என்றும், பிறர்பழி கேட்கக் கூடாது என்றும் வற்புறுத்துகிறோம். ஆனால் மற்றக் குழந்தைகளின் குறையையும் தோல்வியையும் சொல்லிச் சொல்லி நம் குழந்தையின் மனத்தை மகிழ்விக்க முயல்கிறோம்.

இல்லாததைச் சொல்லக் கூடாது. உள்ளதையே பேச வேண்டும் என்கிறோம். ஆனால் கண்ணை மூடி விளையாடும் விளையாட்டில் மறைந்துகொண்டு உள்ள குழந்தையை இல்லை இல்லை என்கிறோம்; ஒரு பொருளை ஒளித்து வைத்துவிட்டு இல்லை என்கிறோம்; கையில் வைத்துக்கொண்டே இல்லை என்கிறோம். பக்கத்து வீட்டுக்குப் போய் வந்துவிட்டு, 'எங்கும் போகவில்லையே' என்று சொல்கிறோம். கடைக்குப் போகப்போவதில்லை என்று சொல்லிவிட்டுத் தெரியாமல் போய் வந்துவிடுகிறோம். படிப்படியாக இப்படி எத்தனையோ பொய்யும் ஏமாற்றும் கற்றுக் கொடுக்கிறோம்.

இவ்வாறு எண்ணிக்கொண்டே வீட்டை நெருங்கினேன். வாசற்படியில் கால் வைத்தபோது எண்ணம் தடைப்பட்டது. உடனே பளிச்சென்று உள்ளத்தில் ஒளி வீசியது. பொறுமை, போட்டி, ஏமாற்றம், பொய் முதலிய பண்புகள், வளர்ந்தவர்களின் வாழ்வுக்குத் தீமையான பண்புகளாக இருக்கலாம். ஆனால் குழந்தைகளின் மனவளர்ச்சிக்கு இவை பயன்படுகின்றன. ஆடுமாடுகளின் சாணம், சாய்க்கடைத் தேக்கம் முதலியவை ஊருக்குள் தீமை பயக்கின்றன. ஆனால் வயலின் செழிப்புக்கு இவை வேண்டியவைகளாக உள்ளன. ஓர் இடத்திற்கு வேண்டாத பொருள் மற்றோர் இடத்திற்கு உரம் ஊட்டுவதாக உள்ளது. ஓர் உயிர்க்குத் தீமை பயக்கும் பொருள் மற்றோர் உயிர்க்கு நல்ல உணவாக அமைகிறது. இயற்கைப் படைப்பில் எங்கும் வேண்டாதது என்று ஒன்று இல்லாதது போலவே, பண்புகளிலும் முற்றிலும் வேண்டாதது என்று ஒன்று இல்லை. பொறாமை முதலிய பண்புகளும் குழந்தைகளின் மனவளர்ச்சிக்கு

ஓரளவு வேண்டியவைகளாக இருப்பதால்தான் படைக்கப்பட்டுள்ளனவோ ?

இலக்கியத்தில் பொய் கண்டால் அதைக் கற்பனை என்று போற்றுகிறோம் ; வளர்ந்த மனிதரிடத்தில், வாழ்க்கையில் அதைக் கண்டால் பெரிய குற்றமாகத் தூற்றுகிறோம். அரசியலாரின் ஆணைப் படி நடக்கும் போர்க்களத்தில் மற்றவர்களைக் கொல்லுதல் வீரச்செயல் ; ஆனால் வீட்டிலோ தெருவிலோ உள்நாட்டிலோ கொல்லுதல் தலைபோகும் குற்றம். தன் ஒழுக்கத்தையும் நெறியையும் காத்துக் கொள்ள உணர்ச்சி பயன்பட்டால் அதை நல்ல மானம் என்று போற்றுகிறோம் ; ஆனால் பிறரைப் பழிக்கவும் வதைக்கவும் அழிக்கவும் உணர்ச்சி பயன் பட்டால் அதை ஆணவம் என்று தூற்றுகிறோம். விளையாட்டில் போட்டிஉணர்ச்சி மகிழ்விக்கிறது ; அதுவே வாழ்க்கையில் தீய வினை ஆகிறது. ஒவ்வொன்றும் ஒவ்வோரிடத்தில் பயனுள்ளதாக விளங்குகின்றது. எதையும் இடம் அறிந்து நிலை அறிந்து அளவு அறிந்து பயன்படுத்திக்கொள்வது அறிவுடைமை. நிலைகடந்தாலும் அளவுகடந்தாலும் நஞ்சு ஆகிறது என உணர்ந்தேன்.

விடாப்பிடி

பக்கத்து ஊரில் ஒரு திருமணத்திற்கு நான் போயிருந்தேன். அதற்கு நண்பரும் குடும்பத்தோடு வந்திருந்தார். திருமண இல்லத்திற்கு நான்காம் வீடு எங்களுக்குத் தெரிந்தவரின் வீடு. அமைதியாக இருப்பதற்காக அங்கே தங்கியிருந்தோம். பகலுணவு முடிந்ததும் புறப்படுவதாக இருந்தோம். அதற்குள் அழகன் ஒரு பெரிய வம்புநாடகம் நடத்திவிட்டான்.

அந்த வீட்டின் மாடிக்கு அல்லியும் அழகனும் ஏறிச் சென்றார்கள். மற்ற வீடுகளின் மாடிபோல் அதுவும் இருக்கும் என்று நாங்கள் பேசாமல் இருந்து விட்டோம். ஆனால் அதன் நிலை வேறு. மூன்றுபுறமும் கைப்பிடிச்சுவர் வைத்து ஒருபக்கம் கைப்பிடிச் சுவரே இல்லாமலிருந்தது. வீட்டுக்காரர் பணக்குறையாலோ, அல்லது அந்தப் பக்கம் கட்டிடம் எழுப்பும் நோக்கத்தாலோ, என்ன காரணத்தாலோ, அந்த ஒரு பக்கத்தில்மட்டும் கைப்பிடிச் சுவர் எழுப்பாமல் விட்டுவிட்

டிருந்தார். முன்னே போன அல்லி அந்தப் பக்கம் பயம் இல்லாமல் நடந்து சுற்றிவந்துவிட்டாள். அழகன் சிறிது தூரம் அந்தப் பக்கம் நடந்துபோயிருக்கிறன். அதற்குள் முதியவர் ஒருவர் பார்த்து அஞ்சிக் கூக்குரலிட்டு நிறுத்தி ஓடிப்போய்ப் பிடித்துக்கொண்டார். அழகன் ஓ என்று அழத் தொடங்கினன்.

அழுகுரல் கேட்டு நானும் நண்பரும் மேலே போய்ப் பார்த்தோம். முதியவர் காரணம் சொன்னர். நாங்கள் கைப்பிடி இல்லாத பக்கத்தைப் பார்த்ததும் அஞ்சினேம். கீழே விழுந்திருந்தால் எலும்பும் கிடைத்திருக்காதே என்று நண்பர் கூறினர். அவ்வளவு உயரமான - இடரான - இடத்தில் கைப்பிடி இல்லாமல் மாடியை விட்டுவைத்திருப்பதே குற்றம் என்று எனக்குப் பட்டது.

அழகனை ஓயப்படுத்த முயன்ருர் நண்பர். நானும் முயன்றேன். எங்கள் முயற்சி பலிக்கவில்லை. அந்தப் பக்கமே நடந்துபோக வேண்டும் என்று பிடிவாதம் செய்தான். மெல்லப் பிடித்துக்கொண்டு அங்கே போய்வருவோம் என்று நண்பருக்குச் சொன்னேன். "ஆபத்தான இடத்தில் உரிமை கொடுப்பதா? நெருப்பில் கை வைக்கவும் பாழ்ங்கிணற்றின் ஓரத்தில் எட்டிப் பார்க்கவும் உரிமை கொடுக்கலாமா? இதற்கெல்லாம் இடம்கொடுக்கக் கூடாது" என்று மறுத்தார்.

என்ன சொன்னலும் அழகன் கேட்கவில்லை. பணம் பயன்படவில்லை. முதியவர் சில பழம் கொண்டு வந்தார். பழமும் பயன்படவில்லை. மிட்டாய் வாங்கித் தருவதாக நண்பர் கூறினர். பயன் இல்லை. மோட்டார் பொம்மை வாங்கித் தருவதாக நான் கூறினேன். பயன் இல்லை. "கீழே போவோம். அம்மாவிடம்

போவோம்" என்று அழைத்தோம். பயன் இல்லை. ஊருக்கே திரும்பிப் போவதாகச் சொன்னோம். பயன் இல்லை.

நண்பருடைய முகத்தில் சுளிப்புக் காணப்பட்டது. சினம் கொண்டு அடித்துவிடுவாரோ என்று அஞ்சினேன். அழகனை என் தோள்மேல் எடுத்துக்கொண்டேன். எடுத்துக்கொள்வதற்கு இசையாமல் திமிறினான். கைகாலை உதறினான். அடக்கி முடக்கி எடுத்துக்கொண்டு கீழே இறங்கினேன். நண்பர் தம் சினத்தை அடக்கிக்கொண்டு பின்தொடர்ந்தார். கீழே சென்றதும் அவனை இறக்கிவிட்டேன். மடமட என்று மாடியை நோக்கியே நடந்தான். நண்பர் பின்னே சென்று பிடித்துக்கொண்டார். அவருடைய சினம் செயலாவதற்கு முன்பே நான் போய் எடுத்துக்கொண்டேன். அங்கே இருப்பதும் தவறு என்று பேசாமல் எடுத்துக்கொண்டு திருமண வீட்டுக்கே நடந்தேன். நண்பரும் தொடர்ந்து வந்தார். அங்கே இளநீர் வெட்டித்தரச் சொன்னோம். வேண்டாம் என்று மறுத்தான். 'கலர்' தரச் சொன்னோம். அதையும் மறுத்தான். "அந்த வீட்டுக்கு, அந்த வீட்டுக்கு" என்றே அழுதான். அதுவரையில் பேசாமல் இருந்த அல்லி, "அந்த வீட்டில் மாடியில் அந்த ஓரத்தில் நடக்கவேண்டுமாம்" என்றாள்.

நண்பர் அவளை வெறுப்புடன் பார்த்து, "உன்னால்தான் வம்பு. நீ செய்தது தவறு. நீ ஏன் மாடிக்குப் போனாய்?" என்றார்.

"அவளுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட மாடி என்று யாருக்குத் தெரியும்?" என்றேன்.

" இவள் முன்னே போனதால்தான், அவனும் போக வேண்டும் என்கிறான். இவள் போகாதிருந்தால்—" என்றார்.

" இது ஒரு காரணம் ஆகாது. வயதும் அறிவும் வேறுபட்ட குழந்தைகள் ஒன்றாக இருந்தால்இப்படிப் பட்ட வம்புகள் ஏற்படும் " என்றேன்.

" நீ இப்படித்தான் ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பாய். ஒரு வீட்டில் எல்லாக் குழந்தைகளும் ஒரே வயதாக இருக்க முடியுமா ? தவளையா ஒரே நாளில் முட்டையிட? அதன் குஞ்சுகளிலும்பெரியவை சின்னவை இருக்கின்றனவே " என்றான்.

அழகனோ அழுகை ஓயவில்லை. அங்கே போக வேண்டும் என்ற பிடியும் தளரவில்லை. யாரோ போய்த் திருமணப் பந்தலில் சொல்லி, நண்பரின் மனைவி வந்துவிட்டாள். காரணம் கேட்டாள். நான் சிரித்தேன்.

" உன்மகன் அழுவதற்கு ஒரு காரணம் வேண்டுமா ?" என்றார் நண்பர்.

" காரணம் இல்லாமல் அழமாட்டானே " என்றாள் தாய்.

" நீங்கள் சொன்னதுதான் உண்மை அம்மா. ஒரு பெரிய காரணம், அதனால் அவன்மனத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டதால்தான் அழுகிறான். காரணம் இல்லாமல் அழுவதற்குக் குழந்தை ஒரு யந்திரமா ?" என்றேன்.

அதற்குள் திருமணத்திற்கு வந்தவர்கள் பலர் அங்கே வந்து எங்களைச் சுற்றிக்கொண்டார்கள்.

வழக்கம்போல் மதிப்புக்கும் புகழுக்கும் அலையும் மனம் உடைய நண்பரின் மனைவி குழந்தையை எடுத்துக்கொண்டு அப்பால் நடந்தாள். சுற்றியிருந்த

வர்களுக்கு ஏதோ ஒரு காரணம் சொன்னேன். நண்பர் அழைக்க, நான் அங்கிருந்து நகர்ந்தேன்.

போகும்போது, நண்பர், "என்ன காரணம்? வெறும் பிடிவாதம்! அந்த முதியவர் தடுத்திருப்பார். தடுத்தால் குழந்தைகளுக்கு எதிர்ப்புணர்ச்சி வளர்ந்து விடும். அதனால்தான் பிடிவாதம் செய்கிறான்" என்றார்.

"அதுமட்டும் இருக்காது. அந்தப் பெரியவர் அன்போடு தடுத்திருக்க மாட்டார். அதிகாரத்தோடு அதட்டி நிறுத்தியிருப்பார். திட்டியிருப்பார். இல்லையானால் பிடிவாதம் வளர்வதற்குக் காரணம் இல்லை. குழந்தையின் மான உணர்ச்சி இப்போது ஆட்டிவைக்கிறது, பாவம்" என்றேன்.

"அவர் செய்ததற்கு நன்றி கூறாமல், அவரிடம் குற்றம் காண்பதா? நன்றாக இருக்கிறது உன் ஆராய்ச்சி" என்று நண்பர் என்னைப் பழித்தார்.

"நான் குற்றம் காணவில்லை. காரணம் சொன்னேன்" என்றேன்.

"ஆபத்தான நெருக்கடியில் எப்படியாவது உயிரைக் காப்பாற்றுவதுதான் பெரிது. இன்சொல், இனிமை, அன்பு இவைகளை எண்ணிக்கொண்டிருக்க அது நேரம் அல்ல. ஓங்கி அடித்து இரத்தம் பீறிட்டிருந்தாலும், அவர் செய்த உதவியை நான் பாராட்டுவேன்" என்றார் நண்பர்.

அதற்குள் அவருடைய மனைவியே எதிரில் வந்து, காரணம் சொல்லும்படி கேட்டாள். நானும் நண்பருமாக, நான் பாதியும் அவர் பாதியுமாக, மாறி மாறிச் சொல்லி முடித்தோம். தாயின் தோள்மேல் இருந்தபடியே அழகன் தேம்பிக்கொண்டிருந்தான். 'அந்த வீட்டுக்கு, அந்த வீட்டுக்கு' என்று இடையிடையே

சொன்னன். சொன்னதெல்லாம் கேட்ட அந்த அம்மா, "இவன் எப்போதும் அப்படித்தான். போன ஆண்டில் நடந்தது தெரியுமா உங்களுக்கு?" என்று என்னைக் கேட்டாள்.

"எது? எனக்கு நினைவு இல்லையே" என்றேன்.

ஒரு கதைபோல் சொன்னாள். "நான் ஒரு நாள் குப்பைக்கூடையிலிருந்த கடிதங்களையும் கடித உறைகளையும் எடுத்துக் கிழித்துக் கிழித்து அடுப்பில் போட்டுக்கொண் டிருந்தேன். பக்கத்தில் இருந்த அழகனும் ஒன்று இரண்டு கடிதங்களைக் கிழித்து அடுப்பில் போட்டுக்கொண் டிருந்தான். போடட்டும் என்று நானும் விட்டேன். ஏதாவது வேலை செய்துகொண் டிருந்தால் அமைதி பிறக்கும் என்றுதான் விட்டேன். அந்நிலையில் தெருவில் தபால்காரர் வந்த ஒலி கேட்டது. தபால்காரர் யார் வந்தாலும் அழகன்தான் ஓடிப் போய் வாங்கி வருவான். வேறு யாராவது போய்த் தபால் வாங்கிவிட்டால், அதற்காக அன்றைக்குப் பெரிய போராட்டம் நடத்துவான். அந்த வழக்கப்படி அவனே ஓடிப் போய்த் தபால் பெற்றுக்கொண்டு வந்தான். வந்தபோதே ஒரு கடிதத்தைக் கிழிப்பது போல் தெரிந்தது. 'கண்ணு! கடிதங்களைக் கிழிக்காதே' என்றேன். 'கிழித்து அடுப்பில் போடப்போகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அடுப்பின் அருகே வந்துவிட்டான். ஒரு கடிதத்தை அதற்குள் கிழித்து விட்டிருந்தான். உடனே கையைப் பிடித்துத் தடுத்தேன். 'வேண்டாம் கண்ணு! அப்பா வந்து படிக்கணும். படித்துப் போட்டுவிட்ட பிறகு கொளுத்தலாம்' என்றேன். 'ஊம் ஊம். நீ மட்டும் இப்பொழுதே அடுப்பிலே போடுகிறாயே!' என்று கையில் உள்ளவற்றை அடுப்பில் போடப் பிடிவாதம் செய்தான்.

வேறு வழி இல்லை என்று ஓர் அடி கொடுத்து அந்தக் கடிதங்களை வாங்கி மேலே வைத்தேன். அப்புறம் நெடுநேரம் அழுதபடியே இருந்தான். என்ன செய்வது? இப்படித்தான் அடிக்கடி கோலம் வருகிறான். அல்லி இவ்வளவு தொல்லை கொடுக்கவில்லை" என்றாள்.

அல்லியின் முகத்தைப் பார்த்தேன். அவள் முகம் முழுதும் மலர்ந்திருந்தது. முன்பற்கள் தெரியச் சிரித்தாள். "பார்த்தாயா? அல்லி! அம்மா உன்னை நல்ல பெண் என்று சொல்கிறாள்" என்றேன். நண்பரைப் பார்த்து, "பெண்குழந்தைகள் அவ்வளவாகத் தொல்லை கொடுக்க மாட்டார்கள். ஆண்குழந்தைகள் போக்கிரிகள், முரடர்கள். பெண்குழந்தைகள் ஆக்க வேலையை விரும்புகிறார்கள். ஆண்குழந்தைகள் எதிர்ப்பிலும் அழிவிலும் திறமையைக் காட்டுகிறார்கள்" என்றேன்.

அழகன் விம்மல் சிறிது சிறிதாக ஓய்ந்தது அறிந்தேன். அந்தப் பக்கமாகப் போய் அவன்முகத்தைப் பார்த்தேன். தூங்கிவிட்டிருந்தான்.

"திருமணம் முடிந்துவிட்டது. இன்னும் என்ன வேலை? குழந்தை தூங்கி எழுவதற்குள் இங்கிருந்து புறப்பட்டுவிட்டால் நல்லது. இல்லையானால் எழுந்தவுடன் மறுபடியும் அந்த மாடிக்குப் போக வேண்டும் என்று பிடிவாதம் செய்வான்" என்றாள் நண்பர் மனைவி.

"அது நினைவில் இருக்காது. மறந்துவிடுவான்" என்றார் நண்பர்.

"மறந்துவிடுவது நீங்களும் நானும். குழந்தைகளா மறக்கும்! அப்பப்பா!" என்றாள் அவர்மனைவி.

"அதற்குக் காரணம் சொல்லட்டுமா?" என்று சொல்லத் தொடங்கினேன். "உங்களுக்கு எழுபது எண்பது துறைகளில் எண்ணம் சிதைகிறது. மனத்தின் ஆற்றல் எழுபது எண்பது துறைகளில் செலவிட்டால், ஒவ்வொன்றுக்கும் குறைந்த அளவே கிடைக்கிறது. குழந்தைக்கு உள்ளவை ஏழெட்டுத் துறை. ஆகையால் எண்ணத்தின் ஆற்றல் ஒவ்வொன்றிற்கும் நிறையக் கிடைக்கிறது. ஒரே நோக்கமாக நெடுநேரம் இருக்க முடிகிறது. ஒன்றை நினைக்கும்போது மற்றவற்றை எல்லாம் மறந்து ஒதுக்கும் இயல்பு குழந்தைக்கு இருக்கிறது" என்றேன்.

"பெண்களுக்கும் இந்தப் பிடிவாதம் ஓரளவு உள்ளது" என்றார் நண்பர்.

அவர்மனைவியின் முகத்தில் ஊடல் கலந்த புன் சிரிப்பு இருந்தது.

நண்பரைப் பார்த்துச் சொன்னேன். "அதற்கும் காரணம் இதுதான். பெண்கள் பெரும்பாலும் வீட்டளவில் வாழ்க்கை நடத்துகிறார்கள். இருபது இருபத்தைந்து துறைகளுக்குமேல் அவர்களின் வாழ்க்கையில் இல்லை. ஆண்களாகிய நாம் வீட்டில் வாழ்வதோடு வெளியுலகத்தில் அலுவலகம் முதலிய இடங்களில் நூற்றுக்கணக்கானவர்களோடு பழகவேண்டியுள்ளது: நம் எண்ணங்கள் நூறு இருநூறு துறைகளில் செலவாகின்றன. ஓர் உருண்டை வெல்லம் நூறு கொழுக்கட்டைக்குச் செலவாவதைவிட, இருபது இருபத்தைந்திற்குச் செலவானால், இனிப்பு மிகும் அல்லவா? அதுபோல்தான் மனத்தின் பிடிவாதமும் மிகுகிறது. ஆண்களாகிய நாம் எடுத்ததை வற்புறுத்தாமல் பெண்களுக்கு விட்டுக்கொடுக்கிறோம். ஆனால் பெண்கள் பிடித்ததை விடாமல் வற்புறுத்தி வெற்றி

பெறுகிறார்கள்" என்று சொல்லி அந்த அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். வருத்தம் உண்டாக்கக் கூடாது என்று எண்ணி, "உங்கள் குடும்பத்தில் எப்படியோ அம்மா! என் குடும்ப அனுபவத்தைச் சொல்கிறேன். எங்கள் சுற்றத்தாரின் குடும்பங்களை யும் பார்த்துச் சொல்கிறேன். நீங்கள் வருத்தப்படக் கூடாது" என்றேன்.

"என்ன வருத்தம் இதிலே?" என்றாள் அவள்.

"எங்கள் குடும்பத்திலும் இதுதான் உண்மை. வெற்றி எல்லாம் இவளுக்கு. தோல்வி எல்லாம் எனக்கு" என்றார் நண்பர்.

அவள் மறுத்தாள். "அதெல்லாம் பொய். இவ ரும் பொல்லாதவர்" என்றாள்.

"எப்படியோ போகட்டும். குழந்தைகள் பிறந்த பிறகு நீங்கள் இரண்டுபேருமாகச் சேர்ந்து குழந்தை களுக்குத் தோற்றுவிடுகிறீர்கள் அல்லவா?" என் றேன்.

"அதற்குக் கணக்கே இல்லை" என்றார் நண்பர்.

"அதுதான் வேண்டியது. குழந்தைவளர்ப்புக்கு முதலில் வேண்டியது பெற்றோர்களின் தோல்விதான். அதில்தான் உண்மையான இன்பம் இருக்கிறது. அப் போதுதான் சிறுகை அளாவிய கூழிலும் மழலைச் சொல்லிலும் அமிழ்தத்தையும் இன்னிசையையும் அனுபவிக்க முடியும்" என்றேன்.

"இன்னொன்று பார்த்தாயா?" என்று நண்பர் தொடங்கினார்.

"என்ன?" என்றேன்.

"ஆண்கள் நாம் பலர் சேர்ந்து ஒற்றுமையாக இருக்க முடிகிறது. பெண்கள் அப்படி இருக்க

முடிவதில்லை. பெண்களால்தான் குடும்பப் பிளவுகள் போர்கள் எல்லாம். என் மனைவியைச் சொல்லவில்லை " என்று நண்பர் சிரித்தார்.

" என் மனைவி, என் தாய், என் உடன்பிறந்தார் இவர்களைப் பொறுத்தவரையில் நீ சொன்னது உண்மைதான். ஆண்களாகிய நாம் ஒன்றுபட்டுப் பழகுவதுபோல் அவர்கள் பழகுவதில்லை " என்றேன்.

" அதற்கென்ன காரணம் ?" என்றார் நண்பர்.

" மனத்தில் பிடிவாதம் இருந்தால், விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை வராது. பெண்களின் வாழ்க்கையில் சில துறைகளிலேயே சிந்தனை செலவாவதால், பிடிவாதத்திற்கு இடம் உள்ளது. விட்டுக் கொடுக்கத் தெரிவதில்லை. குழந்தைகளைப் போல் தான் " என்றேன்.

" திருப்பித் திருப்பிப் பெண்களையே குறைசொல்லுங்கள். இதுதான் ஆண்கள்வழக்கம் " என்றாள் நண்பர்மனைவி. உடனே " நேரம் ஆகிறது. வண்டி பாருங்கள் " என்றாள்.

நானும் நண்பரும் சிரித்துக்கொண்டே வண்டியைத் தேடிச் சென்றோம்.

உரிமை வளர்ச்சி

ஒருநாள் மாலை நான் நண்பரை அழைத்துக் கொண்டு அவருடைய வீட்டிலிருந்து ஆற்றங்கரைக்குப் புறப்பட்டேன். அவர் அல்லியை அழைத்துக் கொண்டார். அழகன் தானும் வருவதாகக் கெஞ்சினான். அவனுடைய தாயும் அழகனை அழைத்துச் செல்லுமாறு சொன்னாள். "அவன் வேண்டாம். நடக்க மாட்டேன் என்று வழிஎல்லாம் தூக்கிக்கொள்ளச் சொல்கிறான். என்னால் தூக்கிக்கொண்டு நடக்க முடியவில்லை" என்றார். "எனக்கும் அப்படித்தானே இருக்கும்?" என்று தக்க மறுமொழி தந்தாள் அந்த அம்மா. உள்ளுக்குள் மகிழ்ந்தவாறே நான் நடந்தேன். அழகன் அழுவதைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே நண்பரும் அல்லியும் வந்தார்கள்.

தெருமுனைக்கு வந்ததும் நண்பர் என்னைப் பார்த்து, "அழகன் முன்போல் இல்லை. வீட்டில் ஓடி ஆடி விளையாடியபடியே இருக்கிறான்; நொடிப்

பொழுதும் சும்மா இருப்பதில்லை. இப்படி எங்காவது வெளியே அழைத்துக்கொண்டு வந்தால் நடக்க மாட்டேன் என்கிறான். தூக்கிக்கொண்டே போக வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறான். அதனால்தான் விட்டுவிட்டேன்" என்றார்.

"வீட்டில் மனம் வேலை செய்கிறது. மனத்தின் வழியே கைகால் ஆடவும் ஓடவும் முடிகிறது. வெளியே வந்தால் மூளை வேலைசெய்கிறது" என்றேன்.

"அதனால் ஆள்மேல் சுமையாக இருக்க வேண்டுமா?" என்றார்.

"இது தெரியாதா அய்யா! மனம் புலன்களை இயங்கச் செய்கிறது. உடல் இயங்குகிறது. வீட்டுக்கு வெளியே வரும்போது குழந்தையின் கண் எவ்வளவோ காட்சிகளைப் புதுமையாகக் காண்கிறது. கண்ணின் வழியாக மூளை கற்கத் தொடங்குகிறது. புதிதாக ஒன்றைக் கற்கும்போது உடம்பு இயங்காது. மூச்சும் வேகமாக ஓடாது. அது இயற்கை. அதனால் நடக்காமல் தோள்மேல் இருந்தபடியே கற்கும் ஆர்வம்என்று கருத வேண்டுமே தவிர, சுமையாகத் தொல்லை தர விரும்புகிறான் என்று கருதக் கூடாது. குழந்தையாக இருக்கும்போது முதல் நான்கு ஐந்து ஆண்டுகளுக்குள் மூளை வளர்கிற வேகம் மிகுதி என்றும், அதன்பிறகு வாழ்நாள் எல்லாம் வளரும் வளர்ச்சியும் அதற்கு ஈடுஆகாது என்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அதனால் குழந்தையை அடிக்கடி வெளியே அழைத்துக்கொண்டுவருவதுதான் கடமை. ஆங்கிலேயர்கள் அப்படிச் செய்கிறார்கள், பார்."

"அவர்களுக்கு என்ன? நம்மைப் போல் தோள் மேலும் இடுப்பிலுமா சுமக்கிறார்கள்? இழுத்துச்

செல்லவும் தள்ளவும் சிறு வண்டிகள் இருக்கின்றன. ஆட்கள் இருக்கிறார்கள். செல்வம் இருக்கிறது."

"வாழ்க்கைவளம் போதாது என்று ஒத்துக் கொள்கிறேன். அதற்கு என்ன செய்வது? ஆனல், வீட்டுக்கு ஒரு தொட்டில் நடைவண்டி எல்லாம் பழங்காலத்தில் இருந்துவந்தன. அவைபோல், வீட்டுக் கொரு தள்ளுவண்டியும் அழகானதாக இருக்க வேண்டும். இப்போது பட்டதாரிகள் நூறு இருநூறு பெற்று நடத்தும் வாழ்க்கையிலும் இவைகள் இல்லை. குழந்தைகள் விளையாடப் போதுமான இடமும் வீடு களில் இல்லை, பாவம்."

நண்பன் ஒரு பெருமூச்சு விட்டான். "அப்படிப் பார்த்தால், மூளையின் வளர்ச்சியைக் கருதியாவது குழந்தைகளை அடிக்கடி வெளியூர்களுக்கும் வேடிக்கை களுக்கும் இயற்கையழகு மிக்க இடங்களுக்கும் அழைத்துச்செல்ல வேண்டும். நம்மால் ஆகாது."

"நாட்டின் செல்வம் குழந்தைகளே என்று அர சாங்கம் உணரும் காலம் வந்தால்,குண்டுகள் செய்யச் செலவாகும் பணத்தை இப்படிப்பட்ட தள்ளுவண்டி கள் செய்து, அம்மை குத்தும் மருந்து இலவசமாகத் தருவதுபோல் வீடுவீடாய்ப் போய்த் தரவேண்டும்."

"எல்லாம் கனவு."

"ஒரு காலத்தின் கனவு மற்ருெரு காலத்தில் நனவு."

இவ்வாறு பேசிச்சென்றபோது, எதிரே ஒருவரின் தோளிலிருந்த குழந்தை, தோளில் நிற்காமல் கீழே இறங்கி விளையாடப் பிடிவாதம் செய்தது. அதற்கு வயது ஒன்றுதான் இருக்கும். அதை நண்பருக்குக் காட்டி, "இதோ பார். அழகனும் இப்படி இருந்த போது, எந்நேரமும் கீழே ஓடி ஆடவே முயன்

றிருப்பான். உன் ஆசைக்கு எடுத்துக்கொள்ள விரும்பி ஞலும் அவன் வெறுத்திருப்பான், அழுதிருப்பான்" என்றேன்.

" உண்மைதான். அப்படி ஒரு காலம் இருந்தது" என்று தலையசைத்தார் நண்பர்.

" அப்போது கைகால் வேகமாக வளரும் பருவம். அதனுல் எடுத்துக்கொள்வது குழந்தையின் வளர்ச் சிக்கு இடையூருக இருந்தது. இயற்கை எப்படி எப் படிக் குழந்தைகளை வளர்க்கிறது, பார்" என்றேன்.

" நண்பர் புன்முறுவலோடு என்னைப் பார்த்து, " அப்போது எனக்கு ஆசை எப்படி இருந்தது, தெரி யுமா? ஆபீசிலிருந்து வந்ததும் சட்டையையும் கழற்ரு மல் குழந்தையை எடுத்துக்கொள்வேன். நெடுநேரம் கொஞ்சுவேன்" என்ருர்.

" போகட்டும். அதோடு விட்டாயே. என் பக் கத்து வீட்டுக்காரர் ஒருவர் இருக்கிருர். அவர்க்குத் தடிப்பான மீசை; முள்போன்ற தாடி. ஆபீசிலிருந்து வந்ததும் குழந்தையை எடுத்து முத்தம் இடுவார், புரட்டிப் புரட்டி முத்தம் இடுவார். குழந்தை வீறிட்டு அழும். ஆறுமாதக் குழந்தை, பாவம்! குழந்தை அழுதால் உடனே அவர் வந்துவிட்டார் என்று தெரிந்துகொள்வோம். அவர் அப்படித் தம் ஆசைக் காகக் குழந்தையைத் துன்பப்படுத்துவார்."

"முத்தம் கொடுக்கும் பழக்கமே எனக்கு இல்லை."

"அது கூடாது. குழந்தை என்ன விரும்புகிறதோ, அதைச் செய்தால் போதும். என்ன கேட்கிறதோ, அதைக் கொடுத்தால் போதும். குழந்தை பெற்ருேரின் முத்தத்தை ஒருநாளும் கேட்பதே இல்லை. நம் ஆசை களைக் குழந்தையின்மேல் திணிப்பது அநாகரிகம். குழந்தையின் நல்ல ஆசைகள் நிறைவேறும்படி, நாம்

சிறிது துன்பப்பட்டாவது வளர்ப்பதுதான் நாகரிகம். மனிதன் செடிகொடிகளை உரிமை கொடுத்து வளர்க்கிறான். ஆனால் குழந்தைகளை அவ்வாறு வளர்க்கக் கற்றுக்கொள்ளவில்லை"

ஆற்றங்கரைக்குப் போய் அமைதியாக உட்கார்ந்தோம். நண்பர் எதையோ சொல்ல வாயெடுத்தார். அல்லி குறுக்கிட்டு, எதிரே ஒரு குழந்தையின் கையில் இருந்த நாய்ப்பொம்மையைக் காட்டி, " அப்பா! அது ஒணும் " என்றாள்.

" போகிற வழியில் கடையில் விற்கிறது. நான் வாங்கித் தருகிறேன், அல்லி! அப்பாவைக் கேட்காதே" என்று நான் அல்லியைத் தட்டிக்கொடுத்தேன்.

நண்பர் அல்லியின் மனத்தை மறந்து, அவள் சொன்ன சொல்லை எண்ணினார். சொல்லில் கருத்தைச் செலுத்தியபடியால், " ஒணும் – என்ன'மா அது ? ஒணும் வாணா என்று சொல்லக் கூடாது என்று பல முறை உனக்குச் சொல்லவில்லையா ? வேண்டும் வேண்டாம் என்று சொல். தப்பு இல்லாமல் பேச வேண்டும், தெரியுமா ?" என்றார்.

நான் சிரித்தேன். நண்பர் என்னை உற்றுப் பார்த்தார். " ஏன் அய்யா உனக்கு இந்த இலக்கணப் புலவரின் வேலை! அது தானாக வரவேண்டிய வயதில் வரும். தவழும் குழந்தைக்கு நடை கற்றுக்கொடுக்கலாமா ? என்ன அவசரம்! குழந்தைக்கு இப்போது எது தேவையோ அதைமட்டும் கற்றுக்கொடு. உனக்குத் தெரிந்ததெல்லாம் கற்றுக்கொடுத்து மூளையில் திணிக்க முயலாதே. குழந்தையின் மூளைக்கு அளவுக்குமேல் சுமை வைக்காதே " என்றேன்.

"இவளை விடச் சின்ன பெண்கள் தெளிவாகப் பேசுகிருர்களே. இந்த வயதில் இவள் இப்படிப் பேசலாமா ?" என்ருர்.

"ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொன்றை முதலில் கற்றுக்கொண்டு தேறிவிடும். நீ பார்த்த பெண் களுக்குப் பேச்சு வளர்ந்திருக்கலாம். உன் பெண் ணுக்குச் சிந்தனை வளர்ந்திருக்கலாம். இனிமேல் பேச்சு வளரலாம். யாருக்குத் தெரியும் ? அவசரப் படக் கூடாது. ஒரு குழந்தைக்கு முதலில் 'க' ஒலி வராது. தோசையை நோசை என்னும். இன்னொரு குழந்தைக்குத் தொடக்கத்தில் 'ந' ஒலி வராது. நாயை ஆய் என்னும். வளர்ச்சி முன்னும் பின்னு மாக அமையும். செடிகொடியைப் போகிற போக்கில் விடுவது போல் முதலில் விட்டுப் பார்க்க வேண்டும். அவசரப்பட்டு வளைக்கக் கூடாது ; முறிந்தாலும் முறிந்துபோகும்" என்று என் கருத்தைச் சொன் னேன்.

நண்பர் என்னைப் பார்த்து, "உன் கருத்துப்படி பார்த்தால், குழந்தை வளர்ப்பு என்ருல் தலையிடாமல் சும்மா இருப்பது என்று ஆகிறது" என்ருர்.

"தலையிடக் கூடாது. குழந்தையை அதன் போக் கில் விட்டு, அதற்கு வேண்டியபோது துணை செய்தால் மட்டும் போதும். தவிர, நீ 'வேண்டாம்' என்று கற்றுக் கொடுத்தாயே, அதுவே இலக்கணப்படி குற்றம்தான். என் தமிழ் ஆசிரியர் ஒருமுறை 'வேண்டா' என்று திருத்தியிருக்கிருர். நன்ருக நினைவிருக்கிறது" என் றேன்.

அல்லிக்குக் கொட்டாவி வந்தது.எனக்கும்வந்தது. பிறகு அது நண்பருக்கும் வந்தது. நண்பர் கொட்டாவி விட்டபடியே குழறிய ஒலியில், "இவள் குழந்தை

யாக இருந்தபோது, எவ்வளவு தப்பாக ஒலித்தாலும் கேட்பதற்கு இனிமையாக இருந்தது " என்றார்.

" அது மழலை. அன்று ஒருநாள் நீ அழகனைத் தூங்க வைக்க முயன்றபோது நான் இருந்தேன். பச்சுக்கோ, பச்சுக்கோ என்று இரண்டு மூன்று முறை நீ அழகனுக்குச் சொன்னாய். முதலில் எனக்கு விளங்கவில்லை. நீ சொன்னதும் அவன் படுத்துக் கொண்டான். படுத்துக்கொள் என்பதை மழலைவடிவில் ' பச்சுக்கோ ' என்று நீ பேசினாய். ஒருகாலத்தில் இப்படித் தவறுதலைப் போற்றி மகிழ்கிறோம். மற்றொரு காலத்தில் கண்டிக்கிறோம். வேடிக்கையாக இருக்கிறது " என்றேன்.

" தவழும்போது முட்டியிட்டால் அழகாக இருக்கிறது. நடக்கும் வயதில் முட்டியிட்டால் வெறுப்பாக இருக்கிறது. ஒருநாள் கடைக்குப் போய் வந்து, வாழைப்பழமும் கிலுகிலுப்பையும் வாங்கிவந்து, ஒரு பழமும் கிலுகிலுப்பையும் அழகன்கையில் கொடுத்தேன். சென்ற ஆண்டில் நடந்தது இது. முதலில் கிலுகிலுப்பையை ஆட்டிக்கொண்டே வாழைப்பழத்தை வலக்கையில் வைத்திருந்தான். அப்போது அல்லி எதற்காகவோ அழுதாள். அழகன் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தவன், சட்டென்று வாழைப்பழத்தை ஆட்டிக்கொண்டே, வாயின் அருகே கிலுகிலுப்பை வைத்தான். எனக்கும் மனைவிக்கும் ஓயாத சிரிப்பாக வந்தது. இப்படி ஒரு காலத்தில் குழந்தைகளின் தவறு மழலை எல்லாம் இன்பமாக உள்ளன. மற்றொரு வயதில் வெறுப்பாக உள்ளன " என்றார்.

" குழந்தைகளிடம் உள்ள குறைகளைக் கண்டு மகிழத் தெரிய வேண்டும். அது பெரிய கலை. அதற்கு உள்ளத்தில் பொறுமை வேண்டும்; வாழ்க்கையில்

ஓய்வான அமைதி வேண்டும். இன்றைய நாகரிக வாழ்க்கை இரண்டும் கெட்டது. பரபரப்பும் வீணான கடமை நெருக்கடியும் மிகுந்த வாழ்க்கையில், ஓய்வு எது? அமைதி எது? குழந்தைகளைப் பெறுகிறார்கள்; குழந்தையின்பத்தைப் பெறுவதில்லை " என்றேன்.

நண்பர் உண்மைதான் என்று உடன்பட்டார். "என் மனைவிக்கு ஓய்வு இல்லாத காரணத்தாலும், வீணான வேலைகளும் வருவார் போவாரும் மிகுந்த காரணத்தாலும் உள்ளத்தில் அமைதி இல்லை. அடிக்கடி குழந்தைகள்மேல் கோபம் கொள்கிறாள்; எரிந்து விழுகிறாள் " என்றார்.

இவர் பொறுமை மிகுந்தவர் போல் பேசுகிறார் என்று எண்ணினேன். பேசாமல் தலை அசைத்தேன்.

ஏதோ கதை சொல்பவர் போல் தொடங்கினார். " ஒரு நாள் எனக்கும் அவள்மேல் கோபம் வந்து விட்டது. நடந்தது வேறொன்றும் இல்லை. அழகன் மோர் கேட்டான். அவன்கண் எதிரிலேயே மனைவி மோரில் தண்ணீர் கலந்து கொடுத்தாள். மோர் ஒரு தனிப்பொருள் என்று குழந்தை எண்ணியிருப்பான். அதில் நீர் கலப்பது இயற்கை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? 'இந்த மோர் வேண்டாம் போ. ஏன் இதில் தண்ணீர் கலந்தாய்? வேறே மோர் கொடு' என்று அவன் அழுது பிடிவாதம் செய்தான். என்னென்னவோ சொல்லியிருக்கிறாள். அவன் கேட்கவில்லை. சொன்னால் விளங்கும் வயது அல்ல அது. தொல்லை பொறுக்கமுடியாமல் எரிச்சல் கொண்டு அடிக்கத் தொடங்கினாள். ஒருதவறும் செய்யாதபோது அடித்தால் குழந்தைகள் மனம் உடைந்து அழுவது உனக்குத் தெரியும். அழகன் அப்படி விம்மி விம்மி அழுதான். 'மோரில் ஏன் தண்ணீர் விட்டாய்? அதை

எடு. எடுத்துவிடு ' என்று மேலும் பிடிவாதம் செய்தான். அவள் மற்றொரு முறை அடிக்கச் சென்ருள். அப்போதுதான் எனக்குக் கோபம் வந்தது. 'நீயே தவறு செய்துவிட்டு அவனை அடிக்கப் போகிருயா ?' என்று கண்டித்தேன் " என்ருர்.

" நாம் தவறு செய்தபோது ஒத்துக்கொள்ள வேண்டும். இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன் என்று உறுதியும் சொல்லிவிட வேண்டும். அன்பாக, கெஞ்சும் குரலில் சொல்ல வேண்டும். தவறு ஒத்துக்கொண்டு பணிந்துபோவது பெருந்தன்மை என்று வாயால் பேசுகிருேம். ஆனால் குழந்தைகளிடம் அதைச் செய்வதில்லை. குழந்தைகள் எப்படி அந்தப் பெருந்தன்மையைக் கற்றுக்கொள்ளும் ? குழந்தைகள், நாம் சொல்லிக் கற்பது குறைவு. மிகக் குறைவு. நாம் செய்வதைப் பார்த்துக் கற்பதுதான் மிகுதி. அதனல் நாம் நடந்து வழிகாட்ட வேண்டும். தெரியாமல் தண்ணீர் விட்டேன் என்று கெஞ்சிச் சொல்லியிருக்க வேண்டும். தோல்விக்குத் தயங்கக் கூடாது. குழந்தையிடம் தோற்றுவிட்டால் தாழ்வு என்ன ? குழந்தையிடம் தோற்றுவிடுவதுதான் பெற்ருேர் கற்க வேண்டிய முதல் பாடம். குழந்தை வெற்றி பெறட்டுமே. வெற்றி எண்ணத்தோடு வளரட்டுமே " என்றேன்.

நண்பர் பேசாமல் இருந்தார். " 'தோற்றுவிடு' என்று ஏதோ ஒரு குறளில் சொல்லியிருக்கிறது " என்ருர்.

அதற்குள் நான், " மோர் பற்றிய போராட்டம் நடந்தபோது, வீட்டிற்கு யாராவது வந்திருந்தார்களா ?" என்று கேட்டேன்.

" ஆமாம் " என்ருர் நண்பர்.

உடனே எனக்குக் காரணம் தெளிவாக விளங்கியது. " வெளியாரின் தொல்லையால்தான் குடும்பத்தில் குழந்தைகள் அல்லல்படும். கணவன்மனைவிக்கு இடையே வரும் கசப்புக்கும் பெரும்பாலும் காரணம் அதுதான். வந்தவர்கள் ஒன்றும் செய்வதில்லை. ஆனால் அவர்களின் எதிரில் பெருமையோடு நடக்க வேண்டும் என்ற மான உணர்ச்சி குடும்பத்தைக் கெடுக்கிறது. வெளியார் வந்திருக்கும்போது குழந்தை இப்படிப் பிடிவாதம் செய்து பேரைக் கெடுக்கிறானே என்று உன் மனைவிக்குக் கோபம் வந்தது. அவளுடைய் மான உணர்ச்சி அப்படி. வெளியார்எதிரில் நம்மை அடித்தாளே என்று குழந்தையின் மனம் கேட்டது. குழந்தையின் மான உணர்ச்சி இப்படி. பெற்றோர் எப்போதும் குழந்தைகளின் மான உணர்ச்சியை மதித்து நடக்க வேண்டும். குழந்தையின் மானம் போல் வேறு எதுவும் இல்லை. மற்றவர்களின் எதிரில் குழந்தையைக் கண்டிக்கக் கூடாது, திட்டக் கூடாது, அடிக்கக் கூடாது. இதை உணராதவர்கள் குழந்தை பெறுவதைவிடப் பெருமலிருப்பதே மேல் " என்றேன்.

அல்லி அடுத்தடுத்துக் கொட்டாவி விடத் தொடங்கினாள். புறப்படலாமா என்று சொல்லி நண்பர் எழத் தொடங்கினார்.

அச்சமும் அடக்கமும்

மற்ருெரு நாள் அழகனுடைய அழுகுரலை வெளியே இருந்து கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தேன். நண்பர் இல்லை. அல்லியும் இல்லை. அழகனும் அவனுடைய தாயும் மட்டும் இருந்தார்கள். அழகன் தலைவிரி கோலமாய்த் தரையில் படுத்திருந் தான். பக்கத்தே எண்ணெய் ஊறிக்கிடந்தது. பார்த்ததும் ஒருவகையாய்க் காரணம் தெரிந்து கொண்டேன். சமையலறையிலிருந்து நண்பரின் மனைவி வந்தாள்.

“ஏன் இப்படி அழ வைத்துவிட்டீர்கள்? எண் ணெய் தேய்த்துக் குளிப்பது என்ருல் எல்லா வீடு களிலும் குழந்தைகள் கோலம் வருதல் இயற்கை தான். மெல்ல எப்படியாவது சொல்லி ஏமாற்றி யிருக்க வேண்டும். முகத்தில் எண்ணெய் தேய்த் தாலும் சிக்காய்த்தூள் தேய்த்தாலும் குழந்தைக ளுக்குப் பிடிக்காது. முகத்தை மற்ற நாளில் தேய்க்க

லாம் என்று விட்டுவிட வேண்டும். கொதிக்கக் கொதிக்க வெந்நீர் வார்த்தாலும் பிடிக்காது. தாங்க முடியாத சூடான வெந்நீர் உடம்புக்கு நல்லது என்று தாய்மார் சிலர் மூட நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அது உடம்புக்குக் கெடுதி என்று தெரிந்துகொள்ளவில்லை" என்று சொல்லிக்கொண்டே அழகனைத் தட்டிக்கொடுத்து எழுப்பி உட்காரச் செய்தேன். நல்ல வேளையாகப் பூனை ஒன்று அப்போது சன்னல் பக்கம் வரவே, அதையும் காட்டினேன். அழுகையை மறந்து பூனையைப் பார்க்கத் தொடங்கினான்.

"நல்லபடியே சொல்லி எண்ணெய் தேய்க்க உட்கார்ந்தேன். எண்ணெய்க் கிண்ணத்தைக் காலால் உதைத்துக் கவிழ்த்துவிட்டான். அதற்குள் அறிவு கொஞ்சம் கோணலாகிவிட்டது" என்றாள் அவனுடைய தாய்.

"ஒருநாளும் அழகனுடைய அறிவு கோணல் ஆகாது, நீங்கள் சொல்வது பொய். வேண்டும் என்று எண்ணெயைக் கொட்டவே மாட்டான். தெரியாமல் கால் பட்டிருக்கும். அதற்கு அடித்திருப்பீர்கள். தெரிந்து செய்யும் குற்றம் வேறு, தெரியாமல் நடந்து விடும் தவறு வேறு. இரண்டிற்கும் வேறுபாடு செய்யாமல், ஒரே தண்டனை கொடுப்பது பெற்றோர்களின் கொடுமையான வழக்கம்" என்றேன்.

"இல்லீங்க" என்றாள் அவள்.

"உங்களைக் குறைகூறவில்லை. பொதுவாகவே எல்லாருடைய வீடுகளிலும் செய்யும் கொடுமை இது. தெரியாமல் கை பட்டுக் கால் பட்டு ஏதாவது விழுந்தால் உடைந்தால், குழந்தைகளை அடிக்கிறார்கள்; ஒறுக்கிறார்கள். அதனால் குழந்தைகளின் மனமே கெட்டுப் போகிறது. அடிக்காமல் விட்டுவிட்டால்,

செய்த தவறு உணர்ந்து குழந்தைகளே வருந்தும். மாதக் கடைசியில் குற்ற அறிக்கைப் புத்தகத்தை நிரப்புவதற்காகப் போலீசார் சிலர் எப்படியாவது யாரையாவது பிடித்துக்கொண்டு போகிறார்களே, அதுபோல் செய்தால் குழந்தைகளுக்கு நியாயத்தில் பற்று ஏற்படாமற் போகும். என்னுடைய பெற்றோர் அப்படி என்னை எத்தனையோ நாள் அடித்திருக்கிறார்கள். அதனால் சொல்கிறேன் " என்றேன்.

" இன்றைக்கு நடந்ததே வேறு " என்றாள்.

" என்ன ? சொல்லுங்கள் " என்றேன்.

எண்ணெய் தேய்க்கும் நாட்களில் அழகனை ஏமாற்றுவதற்காக ஒரு வழக்கம் ஏற்படுத்தியிருக்கிறாள். அதாவது, முதலில் சில துளி எண்ணெய் விரலால் எடுத்துத் துடையில் வரிசையாகப் புள்ளிகள் வைப்பது, அந்தப் புள்ளிகளை அவனே வைக்க வேண்டும் என்று விரும்பும்படி செய்து பிறகு மெல்லக் கைகளில் எண்ணெய் தேய்த்து, முதுகில் தேய்த்து, கடைசியில் தலையிலும் தேய்த்துவிடுவது வழக்கமாம். நாளடைவில் அழகன் தாயைப் புள்ளிவைக்க விடாமல், தானே முதலில் வைத்துக் கொள்ளலானான். இன்று, ஏதோ அவசர வேலையால், தாய் பொறுமை இல்லாமல் அவனுடைய விருப்பத்தை மறந்து தானே எடுத்துப் புள்ளி வைத்துவிட்டாளாம். உடனே அழகன் சினம் கொண்டு காலால் உதைத்திருக்கிறான். எண்ணெய் கொட்டிப் போனது. எண்ணெய் போயிற்றே என்று தாய் அடிக்கவே, குளிக்க மாட்டேன் என்று போராட்டம் தொடங்கிவிட்டான் அழகன்.

கொட்டிய எண்ணெயைப் பற்றிக் கவலைப் படாமல் வழித்துக் கிண்ணத்தில் வைத்து, அல்லது

வேறு எண்ணெய் கொண்டுவந்து வைத்துத் தேய்த்திருந்தால் போராட்டத்திற்கு இடம் இல்லை. அடித்த காரணத்தால் அவனுடைய மான உணர்ச்சி எழுந்துவிட்டது. நான் படிப்படியாகக் கெஞ்சி மறுபடியும் எண்ணெய் தேய்த்துக்கொள்ளச் செய்தேன். அது பெரு முயற்சி ஆயிற்று.

"எண்ணெயால் புள்ளி வைத்து நயமாகத் தேய்க்கக் கற்றுக்கொண்ட நீங்கள், இன்னும் கொஞ்சம் பொறுமையாக இருக்கக் கூடாதா? ஆக்கப் பொறுத்தபின் ஆறப்பொறுத்திருக்கக் கூடாதா?" என்று அவனுடைய தாய்க்குச் சொன்னேன்.

"எங்கள் பழமொழியை - சமையலறைப் பழமொழியை - நீங்கள் சொல்கிறீர்களே" என்றாள்.

"பழமொழி மட்டும் உங்களிடம் பிறந்தது. ஆனால் பொறுமை உங்களிடம் பிறக்கவில்லையே" என்றேன்.

"பொறுமை உண்டு. இல்லாமற் போகவில்லை. ஆனால் எங்கள் நிலைமையை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். குழந்தை வளர்க்கும் வேலை ஒன்று மட்டும் இருந்தால், பொறுமையாக இருக்க முடியும். காலையில் எழுந்தால் . எவ்வளவு வேலை! அடுப்புப் பற்றவைக்க வேண்டும், குளிக்க வேண்டும். சிற்றுண்டி செய்ய வேண்டும். குழந்தைகளைக் குளிக்க வைக்க வேண்டும். அல்லியை ஒழுங்குபடுத்திப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டும். அதற்குள் காய்கறிகளைச் செய்து அவர் ஆபீசுக்குப்போவதற்குள் சமையல் ஆகவேண்டும. இடையிடையே பால்காரர், வேலைக்காரர், வருவார் போவார் முதலியவர்களோடு பேசி வேண்டியதைச் செய்ய வேண்டும். எவ்வளவு வேலைகள்! நிற்க நேரம் இல்லை. இவன் ஒருவனோடு

விளையாடிக்கொண்டிருந்தால் குடும்பம் நடக்குமா? என் தமக்கையை - பெரியம்மா மகளை - நல்ல பணக்கார வீட்டில் கொடுத்தார்கள். சமையல்காரன் எல்லாம் பார்த்துக்கொள்கிறான். அவள் எழுவதற்கு முன்னமே அவன் காப்பி கொண்டுவருகிறான். மற்ற வேலைக்காரர்கள் நாலுபேர். ஆளுக்கு ஒரு வேலையைச் செய்கிறார்கள். குழந்தைகள் சாப்பிட்டார்களா, கணவன் சாப்பிட்டாரா என்றும் அவள் கவனிப்பதே இல்லை. அப்படி இருந்தால் எனக்கும் எவ்வளவோ பொறுமை இருக்கும்" என்று வேகமாகப் பேசினாள்.

"உண்மைதான். இருந்தாலும் அடிக்கக் கூடாது" என்றேன்.

"பக்கத்து வீட்டில் நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். எதிர் வீட்டில் எழு குழந்தைகள் உண்டு. இருந்தாலும் இந்த வீடு போல் அமர்க்களம் இல்லை. அங்கெல்லாம் பேசக் கூடாது என்றால் குழந்தைகள் வாய்திறப்பதே இல்லை. வாயைத் திறந்தால் சரியான அடி உதை விழுகின்றன. அதனால் பிள்ளைகள் ஒழுங்காக இருக்கிறார்கள். இங்கே இந்த இரண்டும் இல்லை. அடங்காப் பிடாரிகள் ஆயின" என்றாள்.

"மெய்தான். பயம் இருந்தால் உடனே அமைதி ஏற்படுத்தலாம். ஆனால் பயம் நெடுநாள் நிற்பதில்லை. பயப்படுத்தி வளர்த்த பிள்ளைகள் வளர்ந்த பிறகு அடங்காப் பிடாரிகள் ஆகிறார்கள். கெட்டவர்கள் ஆகிறார்கள்."

"இருந்தாலும் குடும்பத்தில் அமைதி இருக்கும் அல்லவா?"

"அது என்ன அமைதி அம்மா! வீட்டில் குழந்தைகளின் அழுகையும் ஆரவாரமும் போராட்டமும் இருந்தால் என்ன? இருக்கட்டுமே! உள்ளத்தில்

உரிமையும் மகிழ்ச்சியும் இருந்தால் அதுதான் நல்லது."

"என்னவோ, என்னால் இவர்களை மேய்க்கவே முடியவில்லை."

"நீங்கள் சொல்கிற வீடுகளில் அடிப்பதால் மட்டும் குழந்தைகள் அடங்கியிருப்பதாக நம்புகிறீர்களா? நான் நம்பவில்லை."

"அவரை வேண்டுமானால் கேட்டுப்பாருங்கள்."

"நானும் அதுபோல் அமைதியாக உள்ள குடும்பங்களைப் பார்த்திருக்கிறேன் அம்மா! அங்கே உள்ள பயத்துக்கு அடிப்படைக் காரணம் வேறு. அந்தக் குடும்பத்தின் தலைவர் கையையும் கோலையும் பயன்படுத்துகிறார் என்பது உண்மைதான். ஆனால் முதலில் மனைவியிடத்தில் பயன்படுத்துகிறார். அதனால் மனைவி உரிமைஇல்லாமல் கணவனைக் கண்டதும் அமைதியாய் அச்சத்தோடு நடக்கிறாள். அவள்வயிற்றில் பிறக்கும் குழந்தைகளும் அவளைப் பார்த்து அச்சத்தையும் அமைதியையும் கற்றுக்கொள்கின்றன. நீங்கள் உங்கள் கணவரிடத்தில் அப்படி இல்லையே. நீங்கள் அவர் எதிரிலேயே பயம் இல்லாமல் பேசுகிறீர்கள்; அவர்பக்கத்திலேயே உட்காருகிறீர்கள்; சிரிக்கிறீர்கள்; விளையாடுகிறீர்கள். இப்படி நீங்கள் பயம் இல்லாமல் உரிமையோடு அவரிடம் பழகுவதால், குழந்தைகளும் உங்களையே பார்த்துக் கற்றுக்கொள்கின்றன. எங்கே உரிமைஇருக்குமோ அங்கே போராட்டம்தான் இருக்கும். நாளை முதல் நீங்கள் அவர் வந்தவுடன் பயந்து அடங்கி ஒடுங்கி நடந்து காட்டுங்கள்" என்றேன்.

வெறுப்பும் சினமும் இருந்த இடம் தெரியாமல், அந்தத் தாய்முகத்தில் மலர்ச்சி கண்டேன். தெருவி

லிருந்து நண்பர் வரும் ஒலி கேட்டது. வந்ததும் எங்கள் மலர்ந்த முகங்களைக் கண்டு, "என்ன சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"உங்களைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்" என்றேன்.

"என் எதிரிலும் கொஞ்சம் பேசக் கூடாதா?" என்றார்.

"நாளை முதல் நீங்கள் வீட்டில் இருக்கும்போது நான் உங்களுக்குப் பயந்து அடங்கி ஒடுங்கி நடக்க வேண்டுமாம். வேடிக்கை, சிரிப்பு, எதிரில் நின்று பேசுவது எல்லாம் செய்யக் கூடாதாம்."

"யார் சொன்னது?" என்றார்.

"நான்தான்" என்றேன். தொடர்ந்து, "எங்கே? நான் சொன்னபடி நடக்கவில்லையே அம்மா! இப்போதே சிரிக்கிறீர்கள், பேசுகிறீர்கள்" என்று அந்த அம்மாவைப் பார்த்துச் சொன்னேன்.

"இன்றைக்கே அல்லவே! நாளை முதல்தான் அப்படி இருக்கச் சொன்னீர்கள்!" என்று சிரித்தாள். முன்னே முகத்தில் மலர்ச்சி மட்டும் இருந்தது. இப்போது கணவர்எதிரில் கொல்லென்ற சிரிப்பே பிறந்துவிட்டது.

சொன்னுல் வராது

அடுத்த ஆண்டில் நண்பர் தம்முடைய கிராமத்திலிருந்து தம் அண்ணன்மகனை அழைத்து வந்திருந்தார். அவன் பெயர் நந்தன். கிராமத்தில் நான்காவது வகுப்பு வரையில் படித்திருந்தான். அங்கே ஐந்தாவது வகுப்புக்குமேல் படிக்க வழி இல்லை. இருக்கிற படிப்பும் சரியாகச் சொல்லித் தருவதில்லை. ஆசிரியர்களுக்குச் சம்பளம் குறைவு. ஆகையால் ஒவ்வொருவரும் வியாபாரம் தரகு பயிர் முதலிய ஏதாவது வேறு தொழிலில் ஈடுபட்டுப் பணம் ஈட்டுவதில் முயற்சியாக இருக்கிறார்களே தவிர, பள்ளிக்கூடத்தில் அக்கரை கொள்வது இல்லை என்று சொல்லி, நகரத்தில் படிக்க வைக்க வேண் டும் என்று அவனை அழைத்து வந்தார். அல்லி அழகன் நந்தன் மூன்று பேரும் மகிழ்ச்சியாக விளை யாடுவதும் பள்ளிக்கூடம் போவதும் பார்க்க அழகாக இருந்தன. அழகன் ஒன்றும் படித்துத் தெரிந்து

கொள்ளாவிட்டாலும், அவர்களோடு பள்ளிக்கூடம் போய்வருவது அவனுக்கு விருப்பமாக இருந்தது. அதனால் அவனையும் அனுப்பிவைத்தார்கள். வீட்டை விட்டு எந்தக் காரணத்தாலாவது சில மணி நேரம் வெளியே போய்வருவது, குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு நல்லது என்று நானும் சொன்னேன். பள்ளிக்கூடத்தில் வெவ்வேறு சிறுவர்களோடு பழகும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. அதனால் பார்த்துக் கற்கும் கல்வி அவனுக்கு நிரம்பக் கிடைத்தது; அவனுடைய மனம் வேகமாக வளர்ந்ததுஎன்றே சொல்லவேண்டும்.

மனிதருக்கு வயது ஆக ஆக, ஒரு கெட்ட பழக்கம் வளர்கிறது. உட்கார்ந்த இடத்தை விட்டு எழுவதற்கு மனம் வராத சோம்பல் எப்படியோ அவர்களிடம் வளர்கிறது. இளமையில் ஒரு நொடிப் பொழுதும் அமைதியாக இருக்க முடியாமல் மிக மிகத் துடிப்பாக இருந்தவர்களும், முப்பது முப்பத்தைந்து வயதுக்குப் பிறகு, படுத்த இடத்தை விட்டு நகர்வதற்கும் இருந்த இடத்தை விட்டு எழுவதற்கும் சோம்பலாகத் தயங்குகிறார்கள். உடம்பின் நரம்புகளில் ஏற்படும் மாறுதலே அதற்குப் பெரும்பாலும் காரணம் என்று கூறலாம். செடி நன்றாகக் காற்றில் வளைந்து ஆடுகிறது. ஆனால் மரம் அப்படி ஆட முடிவதில்லை. பெருங்காற்று அடித்தால்தான் அசைகிறது. இளமையில் செடியின் இளங்கிளைகள் போல் இருந்த நரம்புகள், வளர வளர மரத்தின் முற்றிய கிளைகள் போல் ஆய்விடுவதால், துடிதுடிப்பு எல்லாம் அடங்கிப் போகிறது. அதனால் இருந்த இடத்திலிருந்தே எல்லா வேலைகளையும் முடித்துக்கொள்ளலாம் என்று முயல்கிறார்கள். உண்ட கலத்திலேயே கை கழுவி வாய் துப்புகிறார்கள்; குழந்தைகளை அவ்வாறு செய்யவிடுவ

தில்லை, குழந்தைகளைப் பார்த்து, இதை எடு அதை எடு என்று ஓயாமல் வேலை வைக்கிறார்கள், குழந்தைகளை வேலைக்காரர் என்று எண்ணுகிறார்கள். இந்தக் குழந்தைகள் இப்படிப்பட்ட பெற்றோரைப் பார்த்து இதைக் கற்றுக்கொண்டு, "அம்மா ! குடிக்கத் தண்ணீர் கொண்டுவா," "அக்கா ! காலுக்குச் செருப்புப் போடு" என்று எல்லோருக்கும் வேலைவைக்கத் தொடங்குகின்றன. மற்றவர்களை வேலை வாங்குவது இயற்கை என்று எண்ணுகின்றன. அவரவர்களின் கடமையை அவரவர்களே செய்ய வேண்டும் என்ற கடமையுணர்ச்சி இல்லாமல் போகிறது.

நண்பரும் அவருடைய மனைவியும் இப்படி அடிக்கடி அல்லிக்கும் அழகனுக்கும் வேலை வைத்துவந்தார்கள். அந்தக் கண்ணாடி எடு, இந்தப் புத்தகத்தை அங்கே வை, செம்பு கொண்டுவா, கிண்ணத்தில் தண்ணீர் எடுத்துவா, அந்தத் தட்டை எடுத்து மூடு, ஒரு குவளைக் காப்பி கொண்டுவா, பென்சில் எடுத்துவா, இந்தப் பேனாவை மேசைமேல் வை, என் செருப்புக்களை எடுத்துக் கொண்டுவா, இந்தக் குடையை உள்ளே கொண்டு போய் வை என்று இப்படி எல்லாம் வேலை வைப்பார்கள். அல்லியும் அழகனும் ஒவ்வொரு வேளையில் செய்வார்கள் ; ஒவ்வொரு வேளையில் செய்யமாட்டார்கள். இருவரில் அழகன் பொல்லாதவன். பெரும்பாலும் சொன்ன வேலை செய்யமாட்டான். "ஊ ஊம்" என்று மறுப்பான். "நீயே போய் வை, நீயே எடுத்துக்கொள்" என்று இப்படி எல்லாம் சொல்லிவிடுவான். அவனும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், புத்தகப் பையை வாசற்படியிலேயே போட்டுவிட்டு உள்ளே ஓடுவான். 'அதை உள்ளே கொண்டுவந்து வை' என்றால், 'நீ

எடுத்து வை ' என்பான். ' கையைக் கழுவிவிட்டுவா ' என்றால், ' நீ வந்து கழுவு ' என்பான். அவனே திறந்த குழாயை மூடாமல் வருவான். ' மூடிவிட்டு வா ' என்றால், ' நீ போய் மூடு ' என்பான். கடமை யுணர்ச்சி வளர்வதற்குப் பதிலாக இப்படிக் கடமை யைச் செய்யாமல் பிறரை ஏவல் கொள்ளும் உணர்ச்சி வளர்ந்துவந்தது.

நந்தன் வந்த பிறகு நண்பருக்கும் அவருடைய மனைவிக்கும் இந்த வேறுபாடு நன்றாகத் தெரிந்தது. என்ன வேலை இட்ட போதிலும் நந்தன் தட்டாமல் செய்துவந்தான். கடையில் ஏதாவது வாங்கிவருவது முதல், வீட்டில் இதையும் அதையும் எடுத்துவைத்து ஒழுங்குசெய்வதுவரையில் எல்லாவேலையையும் நந்தன் செய்துவந்தான். சொன்னபடி செய்துவந்தான். தம் பிள்ளைகள் இப்படிச் சொன்ன வேலை செய்வதில்லையே என்று நண்பரும் அவர்மனைவியும் கவலைப்பட்டார்கள். என்னிடமும் அடிக்கடி சொல்லத் தொடங்கினார்கள்.

ஒருநாள் இந்தப் பேச்சு வளர்ந்தது. " எங்கள் பிள்ளைகள் ஒரு வேலைக்கும் உதவுவதில்லை, நந்தன் தான் வேலை சொன்னால் தவறாமல் செய்கிறான் " என்றாள் நண்பர் மனைவி.

" இவர்கள் எப்படிப் பிழைக்கப் போகிறார் களோ !" என்றார் நண்பர்.

" ஊரார்பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்று சொல்கிறார்களே அது எதற்காகத் தெரியுமா ?" என்று நான் தொடங் கினேன்.

" என்ன அது ?" என்றார் நண்பர்.

" அது உணவுக்காக மட்டும் சொன்ன பழமொழி அல்ல. உணவில் அந்தப் பழமொழி உண்மை என்பது

கு. 5

உங்களுக்குத் தெரியும். ஊட்டி வளர்த்தல் என்றால் உணவை மட்டும் அல்ல, அறிவு ஒழுக்கம் கடமையுணர்ச்சி எல்லாவற்றையும் ஊட்டுதல் ஆகும். ஊரார் பிள்ளைகளைப் பார்த்து நம் பிள்ளை கற்றுக்கொள்வது எளிது என்பது கருத்து. கடமையுணர்ச்சி ஒழுக்கம் எல்லாம் நாம் சொல்வதால் வருவதில்லை" என்றேன்.

"சொன்னால் நேர்மாறாக நடக்கிறார்கள்" என்றார் நண்பர்.

"சொல்லிக் கற்பது அருமை; பார்த்துக் கற்பதே குழந்தைகளின் இயற்கை. அதுவும், நம்மைப் போல் வளர்ந்தவர்களைப் பார்த்துக் குழந்தைகள் கற்பது குறைவு. தம் வயது உள்ள குழந்தைகளைப் பார்த்து, அவைகளைப் போல் நடப்பதுதான் இயற்கை. அதனால், குழந்தைகள் வீட்டில் வளர்வதைவிட, ஊரார்பிள்ளைகளுடன் சேர்ந்து வளர்வது நல்லது. குழந்தைகள்விடுதி பல ஏற்பட்டு, அவற்றில் குழந்தைகள் வளர்ந்துவந்தால், கடமையுணர்ச்சி முதலியவை ஏற்படும். மேற்குநாடுகளில் செல்வம் உள்ளவர்கள் அப்படித்தான் செய்கிறார்கள். அதனால் அந்தக்குழந்தைகள் வளர்ந்தபின் நம் நாட்டு மக்களைவிடத் திறமையும் கடமையுணர்ச்சியும் மிகுந்தவர்களாக இருக்கிறார்கள்" என்று பேசிக்கொண்டிருந்தபோது நண்பர் குறுக்கிட்டார்.

"அதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். நம் நாட்டு மக்களுக்குத் திறமை முதலியவை இல்லையா?" என்றார்.

"சேர்ந்து வாழும் திறமை, சேர்ந்து மகிழும் ஆற்றல் இவை நம்மவர்களை விட அவர்களுக்கு மிகுதி அல்லவா?" என்றேன்.

"ஓரளவு மிகுதி" என்றார்.

" எப்படியோ நன்மை இருக்கிறது. கண்எதிரே பார் அய்யா! உன் அண்ணன்மகன் தன் சொந்த வீட்டை விட்டு, தாய்தகப்பனை விட்டு வெளியே வந்த பிறகு நல்ல பெயர் எடுக்கிறான். சொன்ன வேலை செய்கிறான். அங்கே இருந்தபோது அவனும் அல்லியைப் போல், அழகனைப் போல் இருந்திருப்பான். பிடிவாதம், போராட்டம், உணவில் வெறுப்பு, சோர்வு எல்லாம் அங்கே இருந்திருக்கும். இங்கே குறைந்திருக்கும் என்று எண்ணுகிறேன் " என்றேன்.

நண்பரின் மனைவி தயங்காமல், " அது உண்மை தான். அங்கே அவனுடைய அம்மாவும் அப்பாவும் திட்டியபடியே அடித்தபடியே இருந்தார்கள். இங்கே வந்து அடங்கியிருக்கிறான் " என்றார்.

" அடங்கியிருக்கிறான் என்று சொல்லாதீர்கள். ஒழுங்கு கற்றுவருகிறான் என்று சொல்லுங்கள். புதிய இடம் எப்போதும் புதிய கல்வியை, புதிய உணர்வைக் கற்றுக்கொடுக்கும். உரிமை இல்லாத இடம் நீதியை, ஒழுங்கைக் கற்றுக்கொடுக்கும். வளர்ந்த மனிதர்களையே பார்க்கலாமே. புதியவர்களிடத்தில் வெளியிடத்தில் ஒழுங்காக நடக்கிறார்கள் " என்றேன்.

" தமிழர்கள் வெளிநாட்டில் ஒற்றுமையாகத் திறமையாக வாழவில்லையா ?" என்றார் நண்பர்.

" இது மனித இயல்பு. மனித இயல்பு மட்டும் அல்ல. பயிர்களிலும் பார்க்கலாம். தாயின் நிழலை விட்டு வேறிடம் போகும் வாழைக்கன்று செழித்து வளரும். பிடுங்கி நட்ட நாற்று வேகமாக வளரும் இப்படியே எல்லாம் " என்றேன்.

"வளராத குழந்தைகளுக்கும் வளர்ந்த மனிதர்களுக்கும் அவ்வளவாக வேறுபாடு இல்லை. மனம் ஒரே வகையாகத்தான் இருக்கிறது" என்றார் நண்பர்.

"உண்மைதான். ஆனால் குழந்தை தன் வாழ்க்கைக்காக ஒரு வழி வகுத்துக்கொள்ள முடியாது; சில நம்பிக்கைகளை வைத்துக்கொள்ள முடியாது. வளர்ந்த மனிதன், முன்னோருடைய அனுபவங்களிலிருந்து சில உண்மைகளைக் கற்று ஒரு நெறியையும் அதைப் பற்றிய நம்பிக்கைகளையும் வைத்துக்கொண்டு, கவலை இல்லாமல் வாழமுடியும். அதுதான் வேறுபாடு" என்றேன்.

"குழந்தை போலவே போலிமானம், புகழாசை, பிடிவாதம், ஆத்திரம், கோபம், பிறர்கருத்துக்கு இடந்தராமை முதலிய குணங்கள், வளர்ந்தபிறகும் எல்லோருக்கும் இருக்கின்றனவே" என்றார் நண்பர்.

"எல்லோருக்கும் இல்லை. புத்தர் ஏசுநாதர் திருவள்ளுவர் காந்தியடிகள் முதலியவர்களிடம் இல்லையே. பெரும்பாலோரிடம் இருக்கின்றன என்பது உண்மை. அவர்கள் உடம்பு வளர்ந்தவர்களே; மனம் வளர்ந்தவர்கள் அல்ல. மனத்தளவில் குழந்தைகள் தான். சிலர் கைகால் முடம் ஆகிக் கடைசிவரையில் தரையில் நகர்ந்தபடியே வாழவில்லையா? அதுபோல் மனம் வளராத குறை உள்ளவர்கள் அவர்கள்" என்றேன்.

"நீயும் நானும் இவளும் எப்படி?" என்று நண்பர் தம் மனைவியைச் சுட்டிக் காட்டினார்.

"நாம் எல்லாம் மனத்தால் முடவர் அல்ல. ஓரளவு வளர்ந்து பண்பட்டிருக்கிறோம். காந்தியடிகள் முதலியவர்களைப் போல் முழுதும் பண்பட்டவர்கள் அல்ல. இருந்தாலும் வளர்ந்திருக்கிறோம். குழந்தைகளுக்காக நீங்கள் எவ்வளவோ பொறுக்கிறீர்

கள். குழந்தைகள் உங்களுக்காக ஒருசிறிதும் பொறுப்பதில்லையே. அதனாலேயே வளர்ச்சி உண்டு என்று தெரியவில்லையா? என்றேன்.

"என்ன இருந்தாலும் அரைகுறைதான்" என்றார்.

"அப்படித்தான் இருக்கும். இரும்பாலும் பொன்னாலும் கட்டிடம் கட்டினாலும், மண்ணின்மேல்தான் நிற்கிறது. மண்ணின் மாறுதலுக்கு ஓரளவு உட்பட்டே தீர வேண்டும். அதுபோல் நம் மனமும் எவ்வளவு உயர்ந்தாலும், உடம்புக்குள் சிக்குண்டு கிடக்கிறது. மனம் வளர்ந்தாலும், நாக்கு முதலிய புலன்கள் பழையபடியே இருக்கின்றன; அவற்றோடு தொடர்புடைய உணர்ச்சிகளும் அப்படியே இருக்கின்றன. ஏமாந்தால் தலையெடுத்து ஆட்சி செய்கின்றன" என்றேன்.

குழந்தை போன்றவர் என்று சிலரைப் போற்றுகிறோம், குழந்தை மனம் என்று பாராட்டுகிறோமே, அது ஏன்? குழந்தையினிடம் உள்ள நல்ல பண்புகளைச் சொல்லவில்லையே" என்றார்.

"பழைய கவலைகளையும் துன்பங்களையும் அடியோடு மறந்துவிட்டு அன்றன்றைக்குப் புதுவாழ்வு தொடங்கி அவ்வப்போது கவலையற்று மகிழும் உயர்ந்த மனம் குழந்தைக்கு அமைந்திருக்கிறது. மற்றவர்கள் செய்த தீமைகளையும் இடையூறுகளையும் மறந்துவிட்டு, உள்ளத்தில் வஞ்சனையும் கரவும் இல்லாமல், உள்ளும் புறமும் ஒத்த அன்போடு அனைவரிடமும் பழகும் தூய மனம் குழந்தைக்கு அமைந்திருக்கிறது. உலகத்தார் எவ்வளவோ உயர்வு தாழ்வுகளையும் ஏமாற்றப் பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்தித் தனக்கு உரிமை தராவிட்டாலும், எல்லோரையும் தன்னோடு

ஒத்தவர்களாக மதித்து எவ்வகையான வேற்றுமைகளையும் பாராட்டாமல் உலகம்ஒருகுடும்பமாகக் கருதி வாழும் தெய்வமனம் குழந்தைக்கு அமைந்திருக்கிறது. நடைமுறையுலகம், விளையாட்டுலகம், கனவுலகம் மூன்றையும் ஒன்ருக உணரும் மெய்யுணர்வு குழந்தைக்கு அமைந்திருக்கிறது. இக்காரணங்களால்தான் குழந்தை மனம் உடையவர் என்று உயர்ந்தவர்களைப் போற்றுகிறோம்" என்றேன்.

திருத்தும் வழி

ஒருநாள் அலுவலகத்திற்குப் போய்க்கொண்டிருந்தபோது, பக்கத்துத் தெருவில் ஒரு வீட்டெதிரே ஒறுக்கும் குரல் ஒன்று கேட்டது. "சாண்பையன் நீ! உனக்கு இவ்வளவு அடமா? இன்றைக்கெல்லாம் உனக்குச் சோறு போடமாட்டேன், போ" என்ருள் தாய் ஒருத்தி. அந்த வீட்டுத் திண்ணையின் மூலையில் நின்றபடியே இருந்தான் ஒரு சிறுவன். அவன்முகம் துயரத்தால் கலங்கியிருந்தது. மாற்ருந் தாயோ என்று மறுபடியும் இருவர்முகத்தையும் பார்த்தேன். முகத்தில் ஒற்றுமை இருந்தது. பெற்ற தாயே என்பது தெளிவாகத் தெரிந்தது.

அந்தத் தாயின் ஒவ்வொரு சொல்லும் விட்டு விட்டு என் செவியில் ஒலித்துக்கொண்டிருந்தன.

சாண்பையன் என்று அந்தச் சிறுவனைத் தாழ்வாக நினைத்துப் பேசினுள். சிறு பிள்ளைகளுக்குத் தாம் சின்னவர்கள், அறிவில்லாதவர்கள் என்ற எண்ணமே

எப்போதும் வருவதில்லை. தம்மை விடப் பெருமை உள்ளவர்களாக அவர்கள் எவரையும் மதிப்பதில்லை. குழந்தைகளின் உலகத்தில் வயது, உயர்வு தாழ்வுக்குக் காரணமாக இருப்பதில்லை. அடிப்பவர்கள் தாழ்ந்தவர்கள் ; அழுகிறவர்கள் உயர்ந்தசாதி. திட்டுபவர்கள் கெட்டவர்கள் ; வருந்துகிறவர்கள் நல்லவர்கள். இந்த வேறுபாடுதான் குழந்தைகளுக்குத் தெரியும். குழந்தையின் உள்ளத்தில் காட்டுமுயல், குள்ளநரி, வீட்டுநாய், போலீஸ்காரன் , கவர்னர், தபால்காரன், பால்காரன், மோட்டார்ஓட்டி முதலான எல்லோருக்கும் ஒரே மதிப்புத்தான். மிரட்டுகிறவர்களுக்கும் அடிக்கிறவர்களுக்கும்கொஞ்சம் மதிப்புக் குறைவு. அன்பு காட்டுகிறவர்களுக்கு மதிப்பு மிகுதி. ரயில் செலுத்துவோனிடத்திலும்ரயிலுக்குக் கொடிகாட்டுவோனிடத்திலும் கொஞ்சம் மதிப்பு மிகுதி. வானத்தில் திரியும் நிலா, நீரில் துள்ளும் பொன்மீன், மூக்கை (துதிக்கையை) ஆட்டி அசையும் யானை போன்றவைகளிடத்திலும் குழந்தைகளுக்கு மதிப்பு உண்டு. அவரவர்களின் பண்புக்கும் திறமைக்கும் தக்கபடி மதிப்பு உண்டே தவிர, சாண் உயரம் ஆறடி உயரம் என்று உயரத்தை அளந்து குழந்தை மதிப்பதில்லை. நடைமுறை உலகமாக இருந்தாலும் சரி, கதையாக இருந்தாலும் சரி, குழந்தைக்கு மதிப்பு இப்படித்தான். கதை, வெறுங்கற்பனை என்று குழந்தை மதிப்பைக் குறைப்பது இல்லை. இவ்வளவும் தெரியாத தாய் ' சாண்பையன் ' என்று தாழ்வாகப் பேசுகிறாள். குழந்தையைப் பெற்றுவளர்க்கும் உடம்பு அவளுக்கு அமைந்தது; அதற்கேற்ற மனம் அமையவில்லை, பாவம் !

'இவ்வளவு அடமா ?' என்கிறாள். அடம் என்றால் என்ன ? கொள்கையில் உறுதிதானே ? அதுதானே

வேண்டும் என்று நூல்கள் சொல்கின்றன. கொடுக்கும் லஞ்சத்திற்காக, புகழும் புகழ்ச்சிக்காகக் கொள்கையை மாற்றிக்கொண்டால் உலகம் பழிக்கிறதே! காந்தியைப் போல 'அடம்' பிடித்தவர்களைத்தானே உலகம் போற்றுகிறது? குழந்தை அப்படி உறுதியாக இருக்கக் கற்றுக்கொண்டால் நல்லதுதானே! தாயின் இன்சொல்லுக்காகவோ அல்லது அவள் போடும் சோற்றுக்காகவோ, குழந்தை தன் கொள்கையில் நெகிழ வேண்டும் என்று தாய் எதிர்பார்க்கிருள். அதுதானே வீழ்ச்சி? புகழ்ச்சிக்கு இரையாவது, லஞ்சம் வாங்குவது ஆகிய வழியில் குழந்தை வாழ வேண்டும் என்று தாய் எதிர்பார்க்கிருள். போகட்டும்! 'இவ்வளவு அடமா உனக்கு?' என்கிறவள், 'இன்றைக்கெல்லாம் சோறு போடமாட்டேன்' என்கிருள். இப்படிச் சோறு போடமாட்டேன் என்று பிடிவாதம் செய்வது அடம் அல்லவா? இவள்மட்டும் அடம் செய்யலாமா? தனக்கு ஒரு சட்டம், மற்றவர்களுக்கு ஒரு சட்டமா? குழந்தைகளின் சட்டப்புத்தகத்தில் இப்படி ஒரு நாளும் இல்லை. குழந்தைகளின் உலகத்தில் எல்லோருக்கும் ஒரே சட்டம். பெற்ருேர்கள் கைவைத்துத்தான் அதையும் கெடுக்கிருர்கள். 'நீ இரண்டு கொடு, நான் இரண்டு கொடுக்கிறேன்' என்றும், 'நீ அன்றைக்குக் கொடுக்கவில்லை, நான் இன்றைக்குக் கொடுக்கமாட்டேன்' என்றும் சட்டம் பிறழாமல் பேசுவதும் நடப்பதும் குழந்தைகளின் வழக்கம். பணம் தேடிச் செலவுசெய்து காப்பாற்றும் தந்தையாக இருந்தாலும், பெற்று வளர்த்துப் பாராட்டிக் காப்பாற்றும் தாயாக இருந்தாலும், குழந்தையின் சட்டம் சட்டம்தான். 'நீ கொடுத்தால் நான் கொடுப்பேன்' என்றும்,

'நீ செய்தால் நான் செய்வேன்' என்றும் சொல்வதே குழந்தைகளின் சட்டம். அன்புக்கு அன்பு, வன்புக்கு வன்பு : இதுதான் குழந்தைகளின் சட்டம். அம்மா, அப்பா, அத்தை, பாட்டி, மாமன், மாமி, அயலார், வேலையாள், விளையாட்டுத் தோழர் எல்லோரிடத்திலும் அன்புக்கு அன்புதான் ; வன்புக்கு வன்புதான். இப்படிப்பட்ட சட்டம் இருக்கும்போது, அடத்துக்கு அடம் செய்வதில் தவறு என்ன என்று குழந்தையின் மனம் சொல்கிறது. முதலில் தாயின் அடம். பிறகுதான் குழந்தையின் அடம். ஆனால் உலகம் இந்த உண்மையைத் தீர ஆராயாமலே, குழந்தைகளுக்கு மட்டும்அடம் இருப்பதாகத் தீர்ப்புச் சொல்லிவிடுகிறது. ஒரு தலைச் சார்பான நீதி! குழந்தைகள் இதனால்தான் வெறுப்பு அடைகின்றன ; சோர்ந்து போகின்றன.

'சோறு போடமாட்டேன்' என்கிறாள். நினைத்தது சட்டமாகிறது இவளுக்கு. இவளுக்கு வெறுப்பு வந்தால் சோறும் போடுவதில்லை. விருப்பு வந்தால் ஓடுகிற குழந்தையையும் தடுத்துப் பிடித்துக் கட்டி அணைத்து முத்தம் இடுகிறாள். குழந்தை தப்பி ஓட முயன்றாலும், திரும்பத் திரும்ப வலிந்து முத்தம் இடுகிறாள். முகத்தைக் காட்டக் குழந்தை மறுத்தாலும், தன் கைகளால் அந்த முகத்தைச் சிறைப்படுத்தி வற்புறுத்தி முத்தம் கொடுக்கிறாள். என்றைக்கும் இவள் விரும்பியது நடக்க வேண்டும்! குழந்தை விரும்புகிறதா, என்ன விரும்புகிறது என்று இவள் எண்ணிப் பார்ப்பதும் இல்லை. குழந்தை தான் விரும்பியபடி நடந்தால், அதை அடிக்கும் உதைக்கும் ஆளாக்குகிறாள். குழந்தைக்கு ஒரு மனம் இருப்பதே இவளுக்குத் தெரியாதோ?

இவ்வாறு எண்ணியவாறே போய்க் கொண்டிருந்தபோது, வலப் பக்கத்தில் ஒரு வீட்டு வாசற்படியில் தளர்நடை நடந்து வந்த குழந்தை விழ, அருகே இருந்த தாய் அதை எடுத்து அணைத்துக் கொண்டு, "இதுவா? அடிக்கணும். அம்மா" என்று அந்த வாசற்படியை இரண்டு அடி அடித்ததைக் கண்டேன். அடிக்கு அடி என்ற சட்டமும் இப்படித் தாய்மாரால்தான் கற்பிக்கப்படுகிறது என்பது அப்போது எனக்குத் தெளிவாயிற்று. தாய் இப்படிக் கற்பித்த கலையைப் பிறகு பள்ளிக்கூடத்தில் திருக்குறள் படிக்கும் இளைஞன் 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்தில் மாற்றிக் கற்கவேண்டியுள்ளது. அவ்வளவு ஏன்? இன்று வாசற்படியை அடித்துக் குழந்தையை மகிழ்வித்த அதே தாய்க்கு அடுத்த குழந்தை பிறந்து வளரும் அல்லவா? அப்போது பெரியகுழந்தை சின்ன குழந்தையை அடிக்கும்போது, "தம்பி அடித்தாலும் நீ திருப்பி அடிக்கலாமா?" என்று வேறு பாடத்தைக் கற்பிக்கத் தொடங்குவாள்.

இந்த எண்ணத்தோடு அலுவலகத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். வேலை தொடங்கினேன். பக்கத்தில் இருந்தவர், காகிதக் கட்டுக்களை எடுத்து மேசைமேல் வைத்துவிட்டு நெடுநேரம் பேசாமல் இருந்தார். சோர்வாகவும் காணப்பட்டார். திரும்பித் திரும்பிப் பார்த்தேன். இரண்டு முறை பெருமூச்சும் விட்டார். இரக்கத்தோடு, "என்ன அய்யா! ஒரு வகையாக, மிகச் சோர்வாக இருக்கிறீர்கள்? என்ன உடம்புக்கு?" என்றேன்.

"எனக்கு என்ன? கொழுக்கட்டை போல இருக்கிறேனே. வீட்டிலே அவளுக்கு உடம்பு நன்றாக இல்லை" என்றார்.

"யாராவது உதவிக்கு வரவழைப்பது தானே?"

"அவளுடைய அக்கா வந்திருக்கிறாள். பார்த்துக் கொள்கிறாள். இருந்தாலும் அவள் நன்றாக இருப்பது போல் வராது. குழந்தைகளின் தொல்லை பொறுக்க முடியவில்லை."

"இரண்டு நாள் அப்படித்தான் இருக்கும்."

"நிமோனியா காய்ச்சலாம். இன்னும் பத்துப் பதினைந்து நாளுக்குமேல் இருக்குமாம். இந்த மூன்று நாளே மூன்று யுகம் போல் ஆகிவிட்டது.

"அதனால்தான் மூன்றுநாள் விடுமுறையில் இருந்தீர்களா? அய்யோ, பாவம்!"

"சொல்ல முடியவில்லை, போ! மூன்றாவது பையன்—பொடிப்பயல் இருக்கிறானே, அவன் பெரிய தொல்லை. வெளிக்குப் போனால், அம்மாவே வந்து கால் கழுவவேண்டும் என்கிறான். பெரியம்மா வரக் கூடாது என்கிறான். நான் போனாலும் கூடாது என்கிறான். அவனுடைய போராட்டத்தைப் பார்த்துக் கொண்டு, மனைவியால் சும்மா படுத்திருக்க முடிய வில்லை. 'எழுந்து வந்து நானே கழுவிவிடுவேன்' என்று எழத் தொடங்குகிறாள். படுக்கையை விட்டு எழவே கூடாது என்று டாக்டர் கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார். அம்மாவே சோறு ஊட்டவேண்டும் என்கிறான். குளிக்கும்போதும் அம்மாவே வந்து குளிப்பாட்டவேண்டும் என்கிறான்." இவ்வாறு சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

நண்பருக்காக இரக்கமுற்றேன். "குழந்தைகளின் வாழ்வில் ஒரு முறை ஒரு வழக்கம் ஏற்பட்டு விட்டால் அதுவே சட்டம் போல் ஆகிறது. பிறகு அதை மாற்றிக்கொண்டு வாழ முடியவில்லை. வளர்ந்தவர்கள் சில பழக்க வழக்கங்களையும் சடங்குகளையும்

காலத்திற்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ள முடியாமல் அல்லல்படுகிறார்களே, அதுபோல்தான்" என்றேன்.

"மனைவியின் தமக்கை தனியாக வரவில்லை. இரண்டு குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறாள். குழந்தைகளை விட்டுவிட்டு வரமுடியுமா? அந்தக் குழந்தைகளுக்கும் இந்தக் குழந்தைகளுக்கும் அடிக்கடி போராட்டம். என் இரண்டாவது பெண்ணுக்கும் இன்னும் அறிவு வரவில்லை. மூன்றாவது பையனைப் பற்றித்தான் முன்னமே சொன்னேனே. என் கிண்ணம், என் தட்டு, என் குவளை, என் செருப்பு, என் தலையணை, என் போர்வை என்று அடிக்கடி பூசல். வந்த குழந்தைகள் எதையும் எடுக்காமல் இருக்க முடியுமா? எடுத்தால் இப்படிப்பட்ட போராட்டம்! அந்தக் குழந்தைகளுக்கு இந்தத் தட்டிலும் கிண்ணத்திலும் சோறு போடக் கூடாதாம். இதற்காகப் புதிய தட்டும் புதிய கிண்ணமும் வாங்க முடியுமா?" என்றார்.

"எல்லாம் நீங்கள் செய்த தவறுதான். தவறு செய்யாமல் இருத்தலும் முடியாதுதான்" என்றேன்.

"என்ன தவறு?" என்றார்.

"உங்களுக்கென்று பெட்டி பீரோ தனித்தனியே வைத்திருக்கிறீர்கள். உங்கள்மனைவியும் அவ்வாறே தனக்கென்று வேறு வேறு பெட்டியும் அலமாரியும் வைத்திருக்கிறாள். அப்பா பெட்டி, அம்மா பெட்டி, அப்பா மேசை, அண்ணன் மேசை என்று இப்படி எல்லாம் தனியுடைமை உணர்ச்சியை வளர்த்திருப்பீர்கள். குழந்தைகளும் தாங்கள் பழகும் பொருள்களில் இந்த உடைமை உணர்ச்சியை வளர்த்துக் கொள்கின்றன. தலையணை முதல் போர்வை வரையில்

இந்த உணர்ச்சி குழந்தைகளுக்குப் பரவுகிறது, பார்த்தீர்களா ?" என்றேன்.

நண்பர் சிறு முறுவலோடு, " ஆராய்ச்சி நன்றாகத்தான் இருக்கிறது. அனுபவம் தாங்க முடியாததாக இருக்கிறது. அவளை மருத்துவ நிலயத்திலேயே சேர்த்துவிட்டால் நன்றாக இருக்குமே என்று எண்ணுகிறேன். அப்போது அவள் அமைதியாகப் படுக்கையில் இருப்பாள். உடம்பு விரைவில் தேறும். குழந்தைகள் எப்படியாவது வீட்டில் இருந்துகொண்டு குத்துச் சண்டை போடட்டும், ஆனால்—" என்று நிறுத்தினார்.

" என்ன தடை அதற்கு ?" என்றேன்.

" அவளேதான் தடை. ' வீட்டிலேயே இருந்தால் குழந்தைகளைப் படுத்தபடியே பார்த்துக்கொள்வேன். நான் இல்லாவிட்டால் அக்கா என்ன செய்வாள் ? அவளால் இந்தக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள முடியாதே ' என்று சொல்லிச் சொல்லித் தடுத்து விட்டாள்."

" அளவுக்குமேல் அன்புகாட்டுவது – கடமை புணர்ச்சிக்கு அப்பால் மிகுதியாக வளர்ந்த பாசம் – தனக்கும் தீமை, மற்றவர்களுக்கும் தீமை. தனிக் குடும்பத்தில் குழந்தைகள் வளர்வதில் பல நன்மை உண்டு ; இந்தப் பெரிய தீமையும் இருக்கிறது. கூட்டுக் குடும்பத்தில் நன்மையும் குறைவு ; தீமையும் குறைவு. அதைவிட, குழந்தைவிடுதிகளில் பகலிலாவது விட்டு வளரச் செய்வது குழந்தைகளுக்கும் நன்மை, நமக்கும் நன்மை " என்றேன்.

என் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த எதிர்ப் பக்கத்துக் கணக்கர் என்னைப் பார்த்து, " எல்லாம் சரிதான். ஆனால் நம் நாட்டு நிலையை மறந்துவிட்டீர்கள். இங்கே சிரான குழந்தைவிடுதிகளும் இல்லை,

அங்கே அனுப்பி வளர்க்க நமக்குப் பொருள்வளமும் இல்லை" என்றார்.

"உண்மைதான்" என்று வாயடங்கினேன்.

பக்கத்து நண்பர் பேசினார்: "நான் என்னவோ எண்ணிக்கொண்டிருந்தேன். மனைவிக்கு வீட்டில் வேலை குறைவு என்றும்; இங்கே நான் செய்யும் வேலை மிகுதி என்றும் எண்ணிக்கொண்டிருந்தேன். இந்த மூன்றுநாளில் உண்மை தெரிந்துகொண்டேன். இது போல் கணக்கு எழுதும் வேலையை விட மிக மிகத் தொல்லையானது மனைவியின் வேலை" என்றார்.

எதிர்நண்பர் அவரைப் பார்த்துச் சொன்னார்: "இங்கே கணக்கு எழுதுவது ஒரே வேலை. அங்கே மனைவி வேலை என்பது ஒரு வேலை அல்ல. சமையல், குளித்தல், துணிவெளுத்தல், குழந்தைவளர்ப்பு, விருந்தோம்பல், வீட்டு வரவுசெலவு பார்த்தல், சுற்றுப்புற உறவு, பொருள்களின் சீரமைப்பு முதலிய பல துறைகள் – பல டிபார்ட்மெண்டுகள் – சேர்ந்த ஒரு பெரிய தொழில் அது" என்றார்.

"தூங்கவைத்தல் என்று ஒன்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள். அது ஒன்றே போதும். நேற்று இரவு மூன்றும் பையனையும் அடுத்த கைக்குழந்தையையும் தூங்கவைப்பது பெரிய வேலையாக இருந்தது. தூக்க நேரம் வந்தால் குழந்தை ஓயாமல் அழுகிறது; காரணம் இல்லாமல் அழுகிறது" என்றார் பக்கத்து நண்பர்.

நான் காரணம் சொல்லத் தொடங்கினேன். "பல வகையிலும் குழந்தை உரிமையோடு வாழ விரும்புகிறது. ஆனால் உலகத்தில் எங்கும் தடையே காண்கிறது. அதனால் பெரிய மனக்குறை குழந்தைக்கு ஏற்படுகிறது. பல வழியிலும் வளர விரும்புகிறது;

சுற்றுப்புறம் அதன் வளர்ச்சிக்கு இடையூறு செய்கிறது. அதனால் குழந்தைக்கு மனத்தளர்ச்சி ஏற்படுகிறது. ஒவ்வொன்றிலும் ஒழுங்கான சட்டம் அமைத்து வாழ விரும்புகிறது; ஒழுங்கும் முறையும் இல்லாமல் கண்டபடி வாழ்ந்து தன்னைத் தண்டிக்க வருகிறவர்களையே உலகத்தில் காண்கிறது. அதனால் குழந்தைக்கு மனநோய் ஏற்படுகிறது. இப்படிக் குழந்தை பகலெல்லாம் மனக்குறையும் மனத் தளர்ச்சியும் மன நோயும் அடைந்து, உள்ளுக்குள் போராடி வருகிறது. அமைதியில்லாமல் வருந்துகிறது. அமைதியற்ற அந்தக் குழப்பம், தூங்கும்வேளையில் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. உண்மை தெரியாமல், பொல்லாத குழந்தை என்று பழிக்கிறோம். அதன் மனதிலை தெரிந்தால் இரக்கப்படுவோம்" என்றேன்.

எதிர்ப்பக்கத்தார் பேசத்தொடங்கினர்: "மற்றவற்றைப் பற்றி நான் பொருட்படுத்துவதே இல்லை. ஆனால், வேண்டாம் என்பதையே குழந்தைகள் செய்யும் போதுதான், என்னால் பொறுத்திருக்க முடியவில்லை. நாம் சொல்வதற்கும் செய்வதற்கும் எதிர்த்துச் செய்வது என்றால், எப்படிப் பொறுப்பது? அதுதான் குழந்தைகளிடம் உள்ள கெட்ட குணம். தொடாதே என்றால் தொடும்; எடுக்காதே என்றால் எடுக்கும்; போகாதே என்றால் போகும்; ஓடாதே என்றால் ஓடும்; எழாதே என்றால் எழும். இப்படியே எதிர்ப்புக்கலை குழந்தைகளுக்குப் பழக்கமாகிவிட்டது" என்றார்.

"உரிமை மனம், உரிமை வேட்கைதான் அதற்குக் காரணம். தடைவந்தபோது எதிர்த்துவளர்வது உரிமைமனம். குழந்தையைத் தடுப்பது என்றால் அதன் உரிமையை எதிர்ப்பது என்று ஆகிறது.

ஆகவே பழிவாங்கும் மனப்பான்மையோடு குழந்தை எதிர்க்கக் கற்றுக்கொள்கிறது. செடியை வளைத்துப் பார். அது வேகத்தோடு எழுந்து எதிர்ப்பக்கம் செல்கிறது. குழந்தையின் மனத்தை இப்படி வளைத்துப் பழக்குகிறோம். அது உரிமையுணர்ச்சியோடு மறுபடியும் மறுபடியும் எதிர்த்து எழுகிறது. எதிர்ப்பு மனப்பான்மைக்கே இதுதான் காரணம்" என்றேன்.

பக்கத்து நண்பரைத் திரும்பிப் பார்த்தேன். கண்மூடித் தூங்கிய நிலையில் தலை தளர்ந்து தளர்ந்து அசைந்துகொண்டிருந்தது. "பாவம்! இரவெல்லாம் போதிய தூக்கம் இல்லாமல் கண்விழித்து வருந்தியிருப்பார்" என்றேன்.

"குழந்தை பெற்று வளர்க்கும் எங்களுக்கு இந்த அனுபவம் அடிக்கடி உண்டு" என்றார் எதிர்ப் பக்கத்தார்.

சிறிது நேரம் கழித்து அவரே மறுபடியும் தம் வீட்டு அனுபவத்தைச் சொல்லத் தொடங்கினர். "இன்று காலையில் சமைத்ததை எல்லாம் பரிமாறுவதற்காக மனைவி எடுத்துவைத்துக்கொண்டிருந்தாள். நெய் மோர் எல்லாவற்றையும் ஒருபக்கம் வைத்தாள். என் சின்ன பையன் சும்மா இராமல் அப்பளத்தை எடுக்கக் கை நீட்டினன். கை பட்டு நெய்க்கிண்ணம் கவிழ்ந்து நெய்யெல்லாம் கொட்டிவிட்டது. ஊரிலிருந்து நேற்றுத்தான் தங்கை கொடுத்தனுப்பிய மணமுள்ள பசு நெய் அது. என் மனம் தாங்காமல், பளார் என்று அவனுடைய கன்னத்தில் அறைந்தேன். அப்பளம் வாயிலிருந்து சிதற, சுருண்டு விழுந்தான். சிறிது நேரம் கழித்து எனக்கே வருத்தமாக இருந்தது. குழந்தையை இப்படியா அடிப்பது என்று மனைவியும் வருத்தப்பட்டுக் கூறினள். நான் புறப்

படும் வரையில் மூலையில் படுத்து அழுதது அழுத படியே இருந்தான். கன்னம் கன்றிப் போய்விட்டது. பாவம். இப்போது நினைத்தால் மனம் வருந்துகிறது" என்றார்.

"என்ன வயது?" என்றேன்.

"மூன்று" என்றார்.

பெருமூச்சு விட்டேன். என் உள்ளத்தில் ஏதோ புண்பட்டது போல் வருந்தினேன்.

பக்கத்து நண்பர் விழித்துக்கொண்டு கண்களைத் துடைத்தார்.

எதிர்ப்பக்கத்தார், "குழந்தைகளை நாம் அடித்தால் பெண்கள் வருத்தப்படுகிறார்கள். பெண்கள் அடித்தால் நம்மால் பொறுக்க முடியவில்லை" என்றார்.

மறுபடியும் அவரே, "நான் பார்த்திருக்கிறேன். வேண்டும் என்றே செய்த குற்றத்திற்காக அடித்தால் குழந்தைகள் அவ்வளவாகத் துன்பப்படுவதில்லை; நெடு நேரம் அழுவதும் இல்லை. ஏதோ நியாயம் இருப்பதாக அவர்களுக்கே தோன்றும்போல் தெரிகிறது. ஆனால், இப்படி அவர்கள் செய்யாத குற்றத்திற்காக அடித்தால், அல்லது, அறியாமல் நேர்ந்துவிட்ட குற்றத்திற்காக அடித்தால், அவர்கள் மனம் உடைந்து வருந்துகிறார்கள்" என்றார்.

பக்கத்து நண்பர் என் முகத்தைப் பார்த்து "மெய்தான்" என்றார். நான் ஏதாவது சொல்வேன் என்று எதிர்ப்பக்கத்தார் எதிர்பார்த்தார்.

"இப்படிக் குழந்தைகளிடம் புகுத்தும் அநியாயத் தண்டனையால்தான் பிற்காலத்தில் போக்கிரிகளும் மிருகத்தன்மை உடையவர்களும் சமுதாயத்தில் ஏற்படுகிறார்கள். வேண்டும் என்று செய்த

குற்றங்களுக்காகவும் குழந்தைகளின் உடம்பைத் தண்டிப்பது மிருகத் தன்மையே. மனத்தைத் தண்டிப் பது நாகரிகம்" என்றேன்.

"குழந்தைகளின் மனத்தை எப்படித் தண்டிப் பது" என்ருர் எதிர்ப்பக்கத்தார்.

"ஏதாவது தவறு செய்தபோது நாம் பார்த்து விட்டு முகம் சோர்ந்து பேசாமல் இருந்தால் போதும். அந்தத் தவறு குழந்தைகளின் மனத்தை வருத்தும். அதுதான் சிறந்த வழி. அடுத்த வழி, நாம் அதற்காக வருந்துவதுபோல் நடிக்க வேண்டும். அது குழந்தை களின் மனத்தை உறுத்தும். அதற்கும் அடுத்த கீழ்ப் படி, சில சொற்களில் கடுமை கலந்து குழந்தைகளுக்கு ஊட்டுவது; அந்தச் சொற்களேயும் அடிக்கடி பயன் படுத்தினுல் குழந்தைகளின் மனம் மரத்துப் போகும். ஆகையால் அளவாக எப்போதோ ஒருமுறை பயன் படுத்த வேண்டும். இப்படி நாம் குழந்தைகளிடம் நடந்தால், இதே முறைகளேக் குழந்தைகள் மற்றவர் களிடம் கையாளும். நாம் பொறுமையைக் கையாண் டால், குழந்தைகளும் பிறரிடம் பொறுமையைக் கையாளும். நாம் கடுமையான சொற்களேக் கையாண் டால் குழந்தைகளும் பிறரிடம் அவற்றைப் பயன் படுத்தும். நாம் அடி உதைகளேக் கையாண்டால் குழந்தைகளும் எளியவர்களே அடித்தும் உதைத்தும் வளரும். அப்புறம், நம் வயிற்றில் போக்கிரிகளும் முரடர்களும் கயவர்களும் பிறந்துவிட்டார்களே என்று கவலைப்படுவதில் பயன் இல்லை. குழந்தைகளின் மனத்தில் குறைகள் வேரூன்றிவிட்டால் அவை வளர்ந்த பிறகும் நீங்குவதில்லை" என்றேன்.

"நாம் வேண்டும் என்ரு செய்கிறேம்?" என்ருர் அவர்.

" வேண்டும் என்று தீமை செய்கிறவர்கள் உலகத்தில் மிக மிகக் குறைவு. தன்னைத்தான் அடக்கியாள முடியாத காரணத்தால் - புலனடக்கம் இல்லாத குறையால்தான் - பலர் கெட்டவர்களாக, ஒழுக்கம் இல்லாதவர்களாக, கொலையாளிகளாகவும் வாழ்கிறார்கள். நீங்களும் குழந்தைகளின் உலகத்தில் அப்படித்தான் இருக்கிறீர்கள். அதனால்தான் குழந்தை விரும்பாதவற்றை எல்லாம் செய்து அதைத் துன்புறுத்துகிறீர்கள். குழந்தை உங்கள் மீசை உறுத்தும் வாய்முத்தத்தைக் கேட்கிறதா? உங்கள் மனத்தில் ஆசை அளவு கடந்து எழுகிறது. அதை அடக்கி ஆளமுடியாமல், குழந்தையின் முகத்தில் உங்கள் முள்நிறைந்த முகத்தைத் தேய்க்கிறீர்கள். குழந்தை உங்கள் அடியை விரும்புகிறதா? உங்கள் மனத்தில் அளவுகடந்த சினம் எழுகிறது. அதை அடக்கி ஆள முடியாமல் குழந்தையின் கன்னத்தில் உங்கள் கையின் வலிமையைக் காட்டுகிறீர்கள். விரும்பாத பெண்ணைப் பிடித்து இழுத்து வற்புறுத்திக் கெடுக்க முயலும் கயவன்மனம், ஒரு குற்றமும் செய்யாதவனை அல்லது தவறிக் குற்றம்செய்து வருந்துகிற எளியவனை அடித்து உதைத்து வதைத்துத் தன் அதிகாரத்தைக் காட்ட முயலும் கொடியவன் மனம் - இவைகள் எல்லாம் இலைமறை காய்போல் நம்முள் இருக்கின்றன " என்றேன்.

" சொல்வது எளிது. செய்வது அரிது. நீங்கள் சொல்கின்ற நெறியை வாழ்வில் கடைப்பிடிக்கும் போதுதான் துன்பம் தெரியும். ஒரு குழந்தை உள்ள வீட்டில் எப்படியாவது வளர்த்துவிடலாம். மூன்று நான்கு குழந்தைகள் உள்ள வீடு அமர்க்களம்தான் " என்றார் எதிர்ப்பக்கத்தார்.

" உண்மைதான். ஆனாலும் குழந்தைகளை வளர்க்க வேண்டிய வழி இதுதான் " என்றேன்.

" நான் வெட்டுக்கத்தி எடுத்து விறகுக் கட்டையை வெட்டினால் அதைப் பார்த்து என் சிறுவனும் அவ் வாறே செய்கிறான்."

" அது இயற்கை ; பார்த்துக் கற்கும் கல்வி."

" அய்யோ ! நல்ல கல்வி ! அவன் விறகை வெட்டு வதில்லை. நான் இல்லாதபோது கத்தி கிடைத்தால், நாற்காலியையே வெட்டுகிறான்."

" அதைத் தடுத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் குழந்தையின் ஆர்வத்தை—அதன் மனத்தில் உள்ள ஊக்கத்தை—போற்ற வேண்டும். மற்றவர்களைப் போல் செயல் செய்து உழைத்து வாழ வேண்டும் என்ற முயற்சி இது."

" வளர்ந்த பிறகு, மற்றவர்களைப் போல் உழைக் காமலே சுகமாக வாழ வேண்டும் என்ற முயற்சியும் ஏற்படுகிறது " என்று பக்கத்து நண்பர் சிரித்தார்.

" கத்தி கொண்டு வெட்டுவது எனக்கும் குழந் தைக்கும் உள்ள போராட்டம். சில வேளைகளில் பெரிய குழந்தைக்கும் சின்ன குழந்தைக்கும் போராட்டம் வந்துவிடுகிறது. பெரியவன் உட்கார்ந்த இடத்திலேயே சின்னவனும் உட்கார வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறான். பெரியவனும் நகர மாட்டேன் என் கிறான். அப்போது என்ன செய்வது ?" என்றார் எதிர்ப்பக்கத்தார்.

" குழந்தை அண்ணனோடு போட்டியிடுகிறது. போட்டி மனப்பான்மையும் நாம்தான் கற்றுக்கொடுக் கிறோம். நீ கெட்டிக்காரன், நீ முன்னே சாப்பிடு, அவனுக்குக் கொடுக்கக் கூடாது என்று பல நாள் சொல்லி அந்தப் போட்டி மனப்பான்மையை நாமே

வளர்த்துவிடுகிறோம். போகட்டும். அப்போதும் சினம் கொள்ளக் கூடாது; அடிக்கக் கூடாது. கூடிய வரையில் அன்பாகக் கேட்டுப் பார்க்கலாம். முடியாத போது விட்டு விலகிவிட வேண்டும். சினத்தாலும் அடிப்பதாலும் விளையும் தீமையைவிட அது மேலானது. சினமும் அடியும் அப்போதைக்குப் போராட்டத்தைத் தீர்த்துவிடலாம். ஆனால் அவைகள் குழந்தையின் மனத்தைக் கெடுக்கின்றன. குழந்தை மனம் மலரை விட மென்மையானது. அதைக் கசக்கிப் பாழாக்கக் கூடாது. இயல்பாக வளருமாறு விட வேண்டும். சினமும் அடியும் நம்மிடமிருந்து குழந்தை கற்றுக் கொள்ளும். அன்பைக் கற்று வளரவேண்டிய மனம் வன்பை—ஹிம்சையை—கற்று வளரும். உணர்ச்சி ஒரு தொத்து நோய். கோப உணர்ச்சி குழந்தைக்குத் தொத்திக்கொள்ளும். அதற்கு மாறாக அன்புணர்ச்சி தொத்திப் பரவட்டும். அதற்காக விட்டுக்கொடுத்துப் பொறுமை காட்ட வேண்டும். அன்புக்காகத் தோற்றுப்போகும் தோல்வி மனப்பான்மை குடும்பத்தில் வளர வேண்டுமானால் இதுதான் வழி. நல்ல நெறியையும் குழந்தைக்கு வற்புறுத்தக் கூடாது. நாம் நடந்து காட்ட வேண்டும். அந்த வழியில் நடந்தால் நடக்கட்டும்; நடக்காமற் போனாலும் போகட்டும் என்று பொறுமையாக இருக்க வேண்டும்."

"அது எப்படி முடியும்?

"ஏன் முடியாது?"

"சாப்பிட்ட கையைக் கழுவும்போது, ஒரு பெரிய தொட்டியில் உள்ள தண்ணீரிலே கையைத் தோய்த்துவிடுகிறது. பெரியவர்கள் குவளையால் மொண்டு கழுவுவதைப் பார்த்தும் குழந்தை அவ்வாறு

செய்கிறதே. ஒரு தொட்டித் தண்ணீர் பாழாவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா ?"

" இது ஒரு பெரிய சிக்கல்தான். காரண காரியம் விளங்காத நிலையில் குழந்தை செய்யும் தவறு இது. சாப்பாடு முடிந்தவுடன் காலத்தை வீணாக்காமல் விரைவில் கையைக் கழுவிவிட்டு விளையாட்டுக்குப் போகும் ஆர்வத்தால் அப்படிச் செய்யலாம். அப்போது நாமே முன்னே போய்க் குழந்தையின் கையைக் கழுவ வேண்டும். அல்லது, இன்னொரு குவளையில் தண்ணீர் மொண்டுவைத்து அதில் கையைத் தோய்த்து விட்டுப் போகுமாறு சொல்ல வேண்டும். அதையும் அன்பாகச் சொல்ல வேண்டும். என்ன செய்வது ? காரணகாரிய அறிவு வளர்ந்த பெரியவர்களே கோயில் குளத்தில் கால் அலம்புகிறார்கள் ; குடிநீர்க் குளத்தில்—ஊருணியில்—வாய் கொப்புளிக்கிறார்கள் ; துணி துவைக்கிறார்கள் ! குழந்தைகள் சிட்டுக்குருவியைப் போன்றவர்கள். சாய்க்கடைநீரில் சிட்டுக்குருவி அழகாகக் குளிக்கிறது. தூய்மை, தூய்மையின்மை அதற்குத் தெரியுமா ? குழந்தையின் நிலையும் அப்படிப் பட்டது."

" நாம் கைகழுவலாம் என்றால் அவன் இடம் கொடுப்பதில்லையே. அதற்கு என்ன செய்வது ? சில நாட்களில் தானே தண்ணீர் வார்த்துக்கொள்வான் ; தானே உடம்பைத் துடைத்துக்கொள்ள விரும்புவான். எதையும் சரியாகச் செய்யவும் தெரியாது."

"அதுவும் உண்டு. பெரியவர்களைப் போல் தானும் உரிமையோடு தன் கடமைகளைச் செய்து வாழ வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. சுதந்தர உணர்ச்சி குழந்தைக்கு இயற்கை. தான் வளரவில்லை என்பதைக் குழந்தை உணராது ; உணர முடியாது.

தான் மற்றவர்களைவிட எந்த வகையிலும் குறைய வில்லை என்ற தன்னம்பிக்கை குழந்தைக்கு இருப்ப தால் இப்படிச் செய்கிறது."

"இப்படி எல்லாம் எண்ணிப் பார்த்துப் பொறுமை காட்ட முடியுமா ?"

"பொறுமை காட்டத்தான் வேண்டும். நாம் இந்தப் பரந்த உலகத்தில் வேறு பெரிய தொண்டும், தருமமும் செய்யாமலே போகலாம். இரண்டு மூன்று குழந்தைகளின் மனத்தில் ஹிம்சையை விதைக்காமல் அன்பை விதைத்துப் பொறுமையை வளர்த்துவிட்டுச் சென்றால் போதும். அதுவே இந்த உலகத்திற்குச் செய்யும் பெரிய தொண்டு. குழந்தையிடம் மட்டும் அன்பும் பொறுமையும் காட்டினால் போதாது. மனைவி யிடமும் வளர்ந்த மக்களிடமும் அன்பும் பொறுமையும் காட்ட வேண்டும். குழந்தையின் கண்முன்னே மனைவி யிடம் சினமும் ஆத்திரமும் கொண்டு நடந்தால், அல்லது அதிகாரத்தோடு பேசினால், அதைப் பார்த்துக் குழந்தையும் அவ்வாறு நடக்கவும் பேசவும் கற்றுக் கொள்கிறது. வேலையாளை நாம் மிரட்டினால், கடுஞ் சொல் கூறினால், குழந்தையும் அந்தப் போக்கைக் கற்றுக்கொள்கிறது. குழந்தையின் இளமனத்தில் சினம் முதலியவைகளை இப்படி விதைக்காமல் வளர்ப்பது பெரிய அறம். எதிர்காலத்தில் இந்தக் குழந்தை கொடியவனாக—கொடிய சொல்லும் கொடிய செயலும் உடையவனாக—முன்கோபம் உள்ளவனாக—அன்பற்ற அதிகாரியாக—எளியாரை மிரட்டி ஏய்ப்ப வனாக வளர்ந்தால், நாம்தான் அதற்குக் காரணமாக இருப்போம். முழுதும் நாமே காரணம் என்று சொல்ல முடியாவிட்டாலும், ஓரளவு காரணமாக இருப்போம். ஏன் என்றால், இளமையிலே இந்த விலங்குணர்ச்சிகள்

தொத்திக்கொள்வது எளிது. ஆகவே உலகத்தில் கொடுமை வளர்வதைக் குறைக்க வேண்டுமானல், குடும்பம் குடும்பமாக இந்த அறத்தை வளர்க்க வேண்டும். குழந்தைமனங்களைக் கெடுத்துவிட்டுப் பிறகு பள்ளிக்கூடங்களில் நீதிநூல்களையும் நீதி மன்றங்களில் சட்டங்களையும் வற்புறுத்திக் கூறுவதால் மனித இனத்தைத் திருத்திவிட முடியாது."

"அப்பப்பா! இதற்கு எவ்வளவு பொறுமை வேண்டும்!"

"இப்படிச் சொல்லுங்கள். உடன்படுகிறேன். பொறுமை நம்மிடத்திலே இல்லை என்றால், குறை நம்முடையதுதானே? நாம் பலவகைக் கடமைகளையும் பலவகைத் தொல்லைகளையும் வாழ்க்கையில் பெருக்கிக் கொண்டு அலைகிறோம்; பரபரப்பாக அலமருகிறோம். அதனல் குழந்தையிடம் பழகும்போது எரிச்சல் நிறைந்த மனத்தோடு பழகுகிறோம். பொறுமை வேண்டுமானல், நம்வாழ்க்கையில் ஓய்வைப் பெருக்க வேண்டும்; அமைதியைப் பெருக்க வேண்டும். வேண்டாத கடமைகளையும் வீணன வேலைகளையும் குறைத்துக்கொள்ள வேண்டும். வீட்டிலே பெரிய கடமை இருக்கிறது, குழந்தைவளர்ப்பு என்பது சிறந்த அறத்தொண்டு என்று உணர வேண்டும். குழந்தையை அணுகும்போது பொறுமையும் அமைதியும் மனத்தில் நிரப்பிக்கொண்டு செல்ல வேண்டும்" என்றேன்.

அதன்பிறகு நண்பர் என்னை உற்றுப்பார்த்தபடி இருந்தாரே தவிர, வாய்திறந்து ஒன்றும் கூறவில்லை.

தொட்டில் பழக்கம்

விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம் திறக்கும் நாள் வந்தது. அல்லியும் நந்தனும் புதுப்புத்தகங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். அழகனுக்கு ஒன்றும் எதிர்பார்க்கத் தெரியவில்லை. மற்றவர்களைப் போல் பள்ளிக்கூடம் போய்வரவும் வீட்டுக்கு வந்ததும் விளையாடவும் போராடவும் மட்டும் தெரிந்துகொண்டிருந்தான். அல்லிக்கும் நந்தனுக்கும் எங்கிருந்தோ பழைய புத்தகங்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தார் நண்பர். அழகனுக்கு மட்டும் புதுப் புத்தகம் வாங்கிவந்தார். அழகன் களித்துக் கூத்தாடினன். நந்தன் பேசாமல் வாங்கிவைத்துக்கொண்டான். அல்லி முதலில் வேண்டாம் என்று மறுத்தாள். அப்பாவின் உறுதியான பார்வையைக் கண்டதும் வாங்கிக்கொண்டாள்; ஆனல் அவளுடைய முகம் வாடிவிட்டது.

நண்பரை நாளுக நான்றும் கேட்கவில்லை. பள்ளிக்கூடம் திறந்து சம்பளம் கட்டுதல் முதலிய செலவுகள்

தவிர, மனைவிக்கு உடல்நலம் இல்லாமல் மருந்துச் செலவு அறுபது ரூபாய்க்கு அந்த மாதத்தில் ஏற்பட்டது. எல்லாம் எனக்குத் தெரியும். ஆகையால் கேட்காமல் பேசாமல் இருந்தேன். அவரே சொன்னார். "என்ன செய்வது அய்யா! இந்த மாதம் எதிர்பாராத செலவுகள்! மருந்துக்கே எவ்வளவோ ஆயிற்று. டாக்டருக்கு இன்னும் தரவில்லை. அவர்க்கும் ஏதாவது தர வேண்டும். வீட்டு வாடகையும் பால் கணக்கும் எப்படித் தீர்ப்பது என்று தெரியவில்லை. நந்தனை ஏன் அழைத்து வந்தேன் என்று வருந்துகிறேன். அவன் நல்ல பையன்தான். செலவை எப்படிக் குறைப்பது என்ற எண்ணத்தால், மனம் இப்படி எல்லாம் போகிறது. பழைய புத்தகத்தைப் படித்து முன்னுக்கு வரக் கூடாதா? நம் குழந்தைகளுக்கு நம்முடைய துன்பம் தெரிவதில்லை. தெரியட்டும் என்றுதான் வாங்கிக்கொண்டு வந்தேன்" என்றார்.

நான் ஒன்றும் மறுமொழி சொல்லவில்லை. வீட்டுக்குத் திரும்பிய பிறகு, என் எண்ணம் எல்லாம் அல்லியின் முகவாட்டத்தைப் பற்றியே இருந்தது.

அல்லி புதுப்புத்தகம் எதிர்பார்த்தாள்; அதில் ஒரு தவறும் இல்லை. எல்லாப் பிள்ளைகளும் பள்ளிக்கூடம் திறந்த தொடக்கத்தில் புதிய புத்தகங்களைக் கையில் வைத்துக்கொண்டு புது மகிழ்ச்சியோடு விளங்கும்போது, அவ்வாறு தானும் இருப்பதற்கு அல்லிக்கு உரிமை இல்லையா? அவள் வேறொன்றும் ஆடம்பரமாகக் கேட்கவில்லை. வைர நகையோ வண்ணப் பட்டுப் பாவாடையோ கேட்கவில்லை. புதிய மோட்டார் கேட்கவில்லை. உயர்ந்த கைக் கடிகாரம் கேட்கவில்லை. இரண்டு பங்கு விலையுள்ள புதுப்

புத்தகம் கேட்டாள். அவ்வளவுதான். நண்பர் ஐந்தாறு ரூபாய் சிக்கனம் செய்வதற்காகப் பழைய புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார். அவர்மேலும் குற்றம் இல்லை. பணத்திற்கு அவர் படும் நெருக்கடி அப்படிப்பட்டது. அவர் என்ன செய்வார்?

அல்லியின் குழந்தைமனம் நல்ல மனம்! எல்லோரைப் போலவும் வாழ விரும்பும் மனம், ஒத்த உரிமை விரும்பும் மனம். இந்த மனத்திற்கு உலகத்தில் இடம் இல்லை. மற்றப் பிள்ளைகளைவிடத் தாழ்ந்த நிலையில் பழைய புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடம் போக வேண்டும். இதுவரையில் தாழ்வுமனப்பான்மையும் இல்லாமல், உயர்வு மனப்பான்மையும் இல்லாமல், ஒத்த உரிமை இருந்து வந்த அல்லியின் மனத்தில், தாழ்வுமனப்பான்மை ஏற்பட்டுவிடும். இது ஏற்பட்டு வளரும் மனத்தில், காலம் வரும்போது உயர்வுமனப்பான்மை தானே தலைகாட்டும். இந்த இரண்டு மனப்பான்மையும் இணைபிரியாதவைகள். ஒன்று இருந்தால் மற்றொன்று தானே வரும். அடங்கி அடிமைப்பட்டு வாழும் மருமகள்தான், பிற்காலத்தில் அடக்கி ஆளும் மாமியார் ஆகிறாள். அளவுக்கு மேல் ஆர்ப்பாட்டம் செய்யும் அதிகாரிதான், தனக்குமேல் உள்ள பெரிய அதிகாரி வரும்போது நாய் போல் வாலை ஆட்டி அடங்கி நடக்கிறான். இந்த ஏற்றத் தாழ்வு இல்லாமல் பிறக்கும் நல்ல குழந்தைகளின் மனத்தில் வேற்றுமைகளை விதைத்துவிடுகிறோம். சமுதாயத்தில் இப்படித் தீமைகளை வளர்த்துவிட்ட பிறகு, அப்புறம் கடவுளின் பெயரால், கோயிலின் பெயரால், அறத்தின் பெயரால், புத்தர் முதலிய சான்றோர்களின் பெயரால், பொதுவுடைமையின் பெயரால், மக்களுக்குள் எந்த

வேறுபாடும் இல்லை என்றும், எல்லோரும் ஒத்த உரிமை உள்ளவர்களாய் வாழ வேண்டும் என்றும் உபதேசம் செய்கிறோம். முளையிலே கிள்ளி எறிய நகத்தைப் பயன்படுத்தாமல், காடாய் வளர்ந்தபிறகு வெட்டுவதற்குக் கோடரிகள் செய்யச் சொல்கிறோம். என்ன சமுதாயம் !

இவ்வாறு எண்ணங்களில் மூழ்கியிருந்தபோது, என் பக்கத்தில் மனைவி வந்து நின்றிருந்ததைத் தெரிந்துகொண்டேன். "எவ்வளவு நேரமாய் இங்கே வந்து நிற்கிறாய் ?" என்றேன்.

" இப்பொழுதுதான் வந்தேன். எதைப் பற்றி எண்ணிக்கொண் டிருக்கிறீர்கள் ?" என்றாள்.

அல்லியின் முகவாட்டத்தைப் பற்றியும் பழைய புத்தகங்களைப் பற்றியும் சொன்னேன்.

" அல்லியின் அப்பா அடித்தாரா ?" என்று கேட்டாள்.

" இல்லை " என்றேன்.

" அவர் எவ்வளவோ நல்லவர். இன்று காலையில் மூன்றும் வீட்டில் நடந்ததைக் கேட்டால், நீங்கள் என்ன எண்ணுவீர்களோ ?" என்று மெல்லிய குரலில் பேசத் தொடங்கினாள். " மூன்றும் வீட்டுப் பையன்—இரண்டாம் பையன் சாந்தலிங்கம்—இன்று காலையில் நல்ல அடிபட்டான். அவன் ஒரு தப்பும் செய்யவில்லை, பாவம். பள்ளிக்கூடத்துக்கு யாரோ வரப்போகிறார் களாம். திருவள்ளுவர் திருநாளாம். அதற்காகச் சலவைச் சொக்காய் போட்டுக்கொண்டு போக வேண் டும் என்று அம்மாவிடம் வற்புறுத்தினான். தோய்த்த சொக்காயே போதும்;போட்டுக்கொண்டு போ என்று அம்மா சொன்னாள். கேட்கவில்லை. மேலும் வற்புறுத் தினான். குரலைக் கேட்டு அப்பா வந்தார். அவரிடமும்

வற்புறுத்தினான். அவர், 'பள்ளிக்கூடம் போகாமல் நின்று போ' என்று திட்டினார். பையன் அழுதான். 'பணக்கார வீட்டுப் பிள்ளைகளைப் போல் கேட்கிறாயா? சலவைச் சொக்காய்க்குப் பிடிவாதம் செய்கிறாயா? இவ்வளவு கொழுப்பா?' என்று பழுக்க அடித்தார்" என்றாள்.

"அப்புறம்?" என்று உள்ளம் நொந்து பெரு மூச்சு விட்டேன்.

"தாய்மனம் கேட்குமா? அப்புறம் தாய் வந்து ஒரு சலவைச் சொக்காய் எடுத்துக் கொடுத்தாள். பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடனே அழுக்குப் படாமல் அப்படியே கழற்றிப் பெட்டியில் வைத்து விட வேண்டும் என்று சொல்லிப் போட்டு அனுப்பினாள்" என்றாள்.

சலவைச் சொக்காய் கேட்டதற்கு அடி விழுந்ததை எண்ணி மிக வருந்தினேன். நினைத்ததற்கெல்லாம் அடித்துத் தண்டித்தல், பொறுமையோடு குழந்தையின் குறையை உணராமலே அடித்து அடக்குதல், தன் மனத்தில் ஆத்திரம் எழுந்தபோதெல்லாம் குழந்தையைத் தண்டித்தல்—பெற்றோர்கள் இப்படித் தொட்டிலிலேயே இந்தச் சர்வாதிகாரப் பழக்கத்தைக் கற்றுக்கொடுத்து அது இளமையிலேயே இரத்தத்தில் ஊறிப் பதியும்படியாகச் செய்துவிடுகிறார்கள். இந்தத் தொட்டில் பழக்கம் இறுதிவரையில் – சுடுகாடு வரையில் – சமுதாயத்தின் சுடுகாடு வரையில் – அரசியல் போர்களால் உலகம் பொசுங்கும் அழிவுநாள் வரையில் வந்துவிடுகிறது. இதை இப்படி வளர்த்து விட்டு, உலக அரசுகளின் மாநாடும், உலக அமைதிக் கழகங்களும் கூட்டிப் போரையும் குழப்பத்தையும் ஒழிக்கப் பாடுபடுவதால் பயன் என்ன? இரத்தத்தில்

ஊறிவிடும் பண்பை, வளர்ந்தபின் படிக்கும் நூல் களும் கேட்கும் பேச்சுக்களும் மாற்ற முடியுமா ?

"மறுபடியும் என்ன எண்ணுகிறீர்கள்?" என்முள் என் மனைவி.

" இந்த வயிற்றெரிச்சலைப் பற்றித்தான் " என் றேன்.

" உலகம் இப்படித்தான் " என்முள்.

" அப்படியானல், போகிற போக்கில் உலகத்தை விட்டுவிட வேண்டும். பொறுமை, அன்பு, நேர்மை, இன்னு செய்யாமை என்ற நல்வழிகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. பிறர் பழித்தாலும் தீமை செய்தாலும் பொறுமையாக இரு, பிறரிடத்தில் அன்பாக இரு, அவசரப்படாதே, துன்பம் செய்யாதே என்றெல்லாம் உபதேசம் செய்வதால் பயன் என்ன ? பையன் ஆத்திரக்காரன், கோபக்காரன் என்று குறை சொல்வதில் பயன் என்ன ? கோபம், ஆத்திரம் இவை களை நாம்தானே குழந்தைக்குக் கற்றுக்கொடுக் கிறேம். அவன் அடித்தால் நீ திருப்பி அடிக்காதே என்று பையனுக்குச் சொல்லித் திருத்த முயல்கிறேம். ஆனல் காரணம் இல்லாமலும் அடிக்கும் கலையை நாம்தான் கற்பிக்கிறேம். உடனே தண்டிக்கும் ராணுவக் கலையை நாம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்துத் தெருவுக்கும் உலகிற்கும் அனுப்புகிறேம். அங்கே போனதும் அடிக்கு அடி, உதைக்கு உதை, பழிக்குப் பழி, திட்டுக்குத் திட்டு என்று அந்தக் கல்வியைச் சிறுவர்கள் பயில்கிருர்கள். சிறுவர்கள் வளர்ந்து மனிதர்களானதும், அடிக்காதவர்களையும் அடிக்க, உதைக்காதவர்களையும் உதைக்க, பழிக்காத

வர்களையும் பழிக்க வல்லவர்களாகி, பொல்லாத அரசியல் வீரர்களாகிறார்கள். கட்சிக் குழப்பங்களையும் உலகப் போர்களையும் நடத்தும் திறமை பெறுகிறார்கள்" என்றேன்.

"போதும், போதும். நமக்குக் குழந்தை இல்லாத போதே இப்படி மனம் நோக எண்ணுகிறீர்களே! குழந்தை இருந்தால்—" என்று நிறுத்தினாள்.

குழந்தை இல்லாத குறை அவள் உள்ளத்தைத் தைத்துவிட்டதோ என்று எண்ணி, அதைப் போக்க முயன்றேன். "இந்தச் சீர்கெட்ட நிலையில் உள்ள சமுதாயத்தில் துன்பப்படுவதற்காகக் குழந்தைகளைப் பெற்றுத்தருவதே குற்றம் என்று தோன்றுகிறது. நம்மைப் போல் குழந்தை பெறாதவர்களாக இருப்பதே நல்லது" என்றேன்.

ஆயினும், அவளுடைய உள்ளத்தை உரம்பெறச் செய்ய முடியவில்லை. கண்கள் கலங்கத் திரும்பிச் சென்றாள்.

—✻—